
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 ] சித்தார்த்தி ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—80 [ இதழ்



திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா 9—5—80

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

தீதாம் அவாநந்தச்
செய்மதுரை வாழ்வேந்தா
நாதா சிவாநந்தம்
நல்குவாய் — வேதச்
சிரகரா நித்தா
திரபரா சுத்தா
அரகரா சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 63

ஆசிரியர் :-
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்.**

குருபாதம்

# “ ஞானசம்பந்தம் ”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 | 10—4—80 | இதழ் 5

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | சிவாலயங்களில் திருமுறை விண்ணப்ப வழிபாடு ... | 193 |
| 2 | மதுரை ஆதீனம் 291-வது ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் பரிபூரணம் ... | 198 |
| 3 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | 201 |
| 4 | திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு ... | 207 |
| 5 | சமயப் பயிற்சி வகுப்பு அறிவிப்பு ... | 208 |
| 6 | திருக்கோட்டாறு, அம்பர்ப்பெருந்திருக்கோயில், அம்பர்மாகாளத் தலச் சிறப்புக்கள் ... | 209 |
| 7 | அன்னை அருள்மாலை | 219 |
| 8 | அபிராமி அந்தாதி ... | 220 |
| 9 | கடிதப் பாடல்கள் ... | 226 |
| 10 | செய்திகள் ... | 229 |
| 11 | எதிர்காலம் ... | 234 |
| 12 | திருவாமூரில் குருபூஜைவிழா ... | 240 |
| 13 | பார்வையாளர் குறிப்பு | 200, 225 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம்

291 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த



திருவருள் தவயோக

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம்
292 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள



ஸ்ரீல்ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 39 | சித்தார்த்தி – பங்குனி – 10—4—80 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! கூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## சிவாலயங்களில்
# திருமுறை விண்ணப்ப வழிபாடு

**சிந்திக்கவைத்த கடிதம் :**

முன்னாள் மத்திய அமைச்சரும், சிறந்தசைவப் பேரறிஞருமாகிய திரு. ஓ வி. அளகேசன் அவர்கள் அண்மையில் தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பிற்கு ஓர் விண்ணப்பத்தைக் கடித வாயிலாகத் தெரிவித்திருந்தார்கள். வைணவத் திருப்பதிகளில், வழிபாட்டுவேளைகளிலும், திருவிழாக் காலங்களிலும், ஆழ்வாராதிகளின் திருநட்சத்திரத்திருநாட்களை ஒட்டியும் நாலாயிரத்திவ்யப்பிரபந்த சாற்றுமுறை மேற்கொள்ளப்பெற்று வருவதைப்போல், சிவாலயங்களிலும் நாம் ஏன் திருமுறைகளை நியமமாக ஓதி வழிபடும் வழக்கத்தை மேற்கொள்ளலாகாது என்பதே அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருந்த செய்தியின் சாரமாகும்.

**பழையவழக்கே :**

தேவாரத் திருமுறைகள் தொகுக்கப்பெற்றபின் கட்டப்பெற்ற தஞ்சைப் பெரியகோயிலில், முதலாம் இராஜராஜசோழன் திருப்பதி

களை நாள்தோறும் இறைவன் திருமுன் முறையாக விண்ணப்பம் செய்வதற்கென்று ஓதுவாமூர்த்திகள் (பிடாரர்கள்) நாற்பத்தெட்டு பேரும், கொட்டிமத்தளம் வாசிக்க ஒருவரும், உடுக்கை வாசிக்க ஒருவருமாக ஐம்பதின்மரை நியமித்திருந்தான் என அக்கோயில் கல்வெட்டு ஒன்று விரிவான செய்திகளைத் தருகிறது. இதனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிவாலயங்களில் திருப்பதிகங்களை இறைவன்முன் ஓதி வழிபடும் முறைமை மேற்கொள்ளப்பெற்றிருந்தமை அறியப்படுகிறது.

### செவிநிறை அமுதம் :

இவ்வாறு இறைவன் திருமுன் அவன்புகழ்பாடும் திருமுறைகளை ஓதி வழிபடுவதில் இறைவன் மகிழ்கின்றான். இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன் ; இங்கு மகிழ்கிறான் என்றல் பொருந்துமோ எனின், பொருந்தும். என்னை? இறைவன் பெருமையை உயிர்கள் உணர்ந்து வளர்கின்றன என்பதை உயிர்களின் உரையாலும் செயலாலும் வெளிப்படையாக உணரமுடிகிறது. உயிர்கள் பண்புற்றிருக்கிறது என்பது இதனால் தெளிவுறுதலின் என்க.

உதாரணமாகத் தந்தையையும் மைந்தனையும் எடுத்துக்கொள்வோம். மைந்தன்வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருப்பவன் தந்தை. மைந்தனிடம் தந்தை ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் தந்தையின் பெருமையை மைந்தன் உணர்ந்து அடக்கத்துடன் வெளியிடும்போது அதனைக்கேட்கும் தாய்தந்தையர் மைந்தனின் பண்புகண்டு மகிழ்வதுபோலாகும். மேலும் அடியார்களும், அன்பர்களும், இப்பாமாலைகளைக்கேட்டு உய்திபெறவேண்டும் என்பதற்காகவுமாகும். மேலும், சிவபெருமானுக்கு அர்ச்சனை தமிழ்ப் பாடல்களே. இறைவன் திருச்செவியில் சென்று சேரும் இப்பதிகப்பாமாலைகளால் உலகத்துப் பல்லுயிர்களும் செழித்து ஓங்கும் என்பர் பெரியோர். "தோடுடைய செவியன்" எனத் திருச்செவியைச் சிறப்பித்துத் தொடங்கிய திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தை விளக்கவருமிடத்துச் சேக்கிழார் சுவாமிகள்,

> "பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
> செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து..."

என விளக்கியருளுவர். எனவே இறைவன்திருமுன் புநின்று தேவாரத் திருவாசகப் பனுவல்களைத் திருச்செவி நிறையுமாறு எடுத்தோதி வழிபடும் மரபு தொன்மையானதே என்பது நன்கு விளங்கும்.

### இப்போதுள்ள நிலை :

தற்போது ஓரளவு வருவாய் உள்ள திருக்கோயில்களில் ஓதுவாமூர்த்திகள் பணியாற்றிவருகின்றனர். இவர்கள் பூஜாகாலங்களில்

பன்னிருதிருமுறைகளிலிருந்தும் ஒவ்வோர்பாடல் ஓதுதல் அல்லது பஞ்சபுராணம் ஓதுதல் என்ற மரபினைப் பின்பற்றிவருகின்றார்கள். எப்போதாவது சிறப்பு நாட்களில் பன்னிரு திருமுறை அகண்ட பாராயணம் ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு நிகழ்த்தப்பெற்றுவருகிறது. என்றாலும், சிவாலயங்களில் திருமுறை விண்ணப்பத்திற்கு என்று குறிப்பிட்ட நாட்கள் எதுவும் ஒதுக்கப்பெறவில்லை.

## தமிழ்மந்திரங்கள் :

தமிழில் அர்ச்சனை செய்யவேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே பரவலாக வளர்ந்துள்ளது. தேவார திருவாசகப் பனுவல்களும், ஏனைய திருமுறைப் பாடல்களும் இறைவன்முன் ஓதி வழிபடத்தக்க தமிழ் மந்திரங்களேயாகும்.

> " நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப. "

என்ற தொல்காப்பிய இலக்கணத்திற்கு ஏற்ப திருமுறைகளும் தம் தம் பயனைக் கற்பவர்களுக்குத் தவறாது அளிக்கும் ஆற்றல் உடையன என்பதைப் பெரியபுராண வரலாற்றுச் செய்திகள் மெய்ப்பிக்கின்றன. எனவே அர்ச்சனைக்கு உகந்த தமிழ் மந்திரங்களாகத் திருமுறைகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல் முற்றிலும் பொருத்தமானதே.

## பாராட்டும் ஏக்கமும் :

வைணவத் திருப்பதிகளில் பூஜாகாரியங்களைச் செய்துவரும் பட்டர்கள் வடமொழி மந்திரங்களோடு அவ்வத்திருப்பதிகளில் ஆழ்வாராதிகளால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற பிரபந்தப்பனுவல் களையும் நன்கு மனனம் செய்துள்ளனர். வழிபட வருவோர்க்குத் தீபாராதனையையொட்டி அங்குள்ள பட்டாசாரியர்கள் அவ்வத்திருப்பதி களுக்குரிய தமிழ்ப் பிரபந்தப் பாடல்களைத் தெளிவுபெறக் கூறி விஷ்ணுமூர்த்தியின் திருவுருவத் தத்துவச்சிறப்பை விளக்குவதோடு, அப்பிரபந்தப் பாசுரங்களையே கூறி ஆசீர்வாதமும் செய்கிறார்கள். இவ்வகையால் வைணவத் திருக்கோயில் பட்டாசாரியர்கள் பாராட் டத்தக்கவர்களாகின்றனர். ஆனால் சிவாலயங்களில் பணிபுரியும் சிவாசாரியர்கள் நிலை இதற்கு மாறானது. ஒருசிலரைத்தவிர பெரும் பாலான சிவாசாரியர்களுக்குப் பல ஆண்டுகளாகப் பணியாற்றியிருந் தும், தாம் பணியாற்றும் திருக்கோயில் பெருமான்மீது சார்த்தப்பெற் றிருக்கும் தேவாரத்திருவாசகப் பனுவல்களில் ஒன்றிரண்டுகூட மனப் பாடம் இருப்பதில்லை. சிலர் மனப்பாடம் இருந்தும் சொல்வதில்லை. தற்போதுள்ள திருக்கோயில்களின் நிதிநிலையில் எல்லாச்சிவாலயங்

களிலும் ஓதுவாமூர்த்திகளை நியமித்தல் என்பது எளிதன்று. சிவாசாரியப்பெருமக்களே அவ்வத்தலத் திருமுறைகளைப் பயின்று வழிபாட்டுவேளையில் இறைவன்முன் இயன்றவண்ணம் விண்ணப் பித்து, வழிபடவருவோரையும் தமிழ்ப்பாடல்களைக்கூறி ஆசீர்வதிக்கப் பழகிக்கொள்ளுதல் சிவநெறிவளர்ச்சிக்குப் பெரிதும் பயன் தரும்.

## வழிகாட்டியருளும்பாங்கு :

சைவத்திருக்கோயில்களில் தேவார திருவாசகங்களை விண்ணப் பித்து வழிபடும் பழைய முறையைப் புதுப்பிக்கவேண்டும் எனத் திருவுள்ளங்கொண்டிருந்த தருமையாதீனம் இருபத்தாருவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குத் திரு. ஓ. வி. அளகேசன் அவர்களின் கடிதம் பெருமகிழ்ச்சியைத்தந்தது. எனவே, இதுபற்றிச் சிவாகம - திருமுறை அறிஞர்களுடன் கலந்து ஆய்ந்து, கீழ்க்காணுமாறு திருமுறை விண்ணப்பித்தலை மேற்கொள்ளலாம்எனத் திருவாய்மலர்ந் தருளினார்கள். எல்லாவற்றிற்கும் முன்னோடியாக விளங்கும் தருமை யாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்களில், உடனடியாக இம்முறையில் திருமுறை விண்ணபஞ்செய்யக் கட்டளையிட்டருளி யுள்ளார்கள். இது தமிழ்மக்களுக்கும், குறிப்பாகச் சைவமக்களுக்கும், பெரும் பயனையும், மகிழ்ச்சியையும் அளிக்கக்கூடியதாகும்.

## நாள் வழிபாட்டில் :

பாடல்பெற்ற சிவாலயங்களில், அவ்வத்தலத்துக்குரிய திருப்பதி கங்களை ஒரு நாளைக்கு ஒருமுறையாவது சிவபிரான் திருமுன்னர் ஓதி வழிபடுதல் வேண்டும். ஓதுவாமூர்த்திகள் இருப்பின் அவர்களைக் கொண்டு பண்ணோடு பொருள்விளங்கும்படி ஓதச்செய்யலாம். இல்லை என்றால் சிவாசாரியர்களே இசைகூடும் வகையில் ஓதலாம்.

சிதம்பரம், சீகாழி, திருவையாறு போன்ற அதிகப் பதிகங்கள் உள்ள தலமாக இருந்தால் ஐந்து அல்லது ஏழுநாட்களுக்கு வருமாறு பகுத்துக்கொண்டு மேற்கூறியவாறு ஓதி வழிபடலாம். பாடல்பெறாத் தலங்களாகவோ, வைப்புத் தலங்களாகவோ இருந்தால், சைவத் தலங்களுள் தலையாயதான தில்லைப்பதிகங்களையோ அல்லது பிற தலப்பதிகங்களையோ ஓதிவழிபடலாம். ஒவ்வொரு பதிகமுடிவிலும் வெற்றிலை பாக்கு, வாழைப்பழம் நிவேதனம் செய்து கற்பூரதீபம் காட்டி அடுத்தபதிகம் தொடங்கலாம். இவையாவும் நாள்தோறும் செய்யத்தக்கன.

## ஆண்டுக்கு ஒருமுறை :

தேவார திருவாசக ஆசிரியர்கள் நால்வர். இவர்களின் திரு நட்சத்திரங்களைப் பஞ்சாங்கம் வாயிலாக அறியலாம். திருமுறை விண்ணப்பம் செய்ய வேண்டுமாயின் முன்னதாகவே திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாகத் திருநாவுக்கரசு நாயனரின் தேவாரங்களை விண்ணப்பம் செய்ய வேண்டுமானல் அவர்களின் திருநட்சத்திரமாகிய சித்திரைச்சதயத்தை நினைவுகூர வேண்டும். அவர்கள் அருளிச்செய்த பதிகங்கள் 314 ஆகும். ஒருபதிகத்தைஓத இராகதாளக்கட்டின்றிச் சுத்தாங்கமாக ஐந்து அல்லது ஏழுநிமிடங்கள் ஆகலாம். ஒருமணி நேரத்தில் சராசரி பத்துப்பதிகங்கள் ஓதலாம். இரண்டுமணிநேரம் நாள்தோறும் எனக்கொண்டால் அப்பர் தேவாரம் அனைத்தையும் விண்ணப்பிக்கப் பதினைந்து அல்லது பதினறுநாட்கள் போதுமானது. எல்லாச் சிவாலயங்களிலும் சித்திரைச் சதயத்திற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னர் ஊர்மக்களுக்கு திருநாவுக்கரசர் திருப்பதிக விண்ணப்பம் இன்று முதல் பதினைந்து நாட்களுக்கு நாள்தோறும் மாலை ஆறுமணி முதல் எட்டு மணிவரை நடைபெறும் என்று அறிவித்துவிட்டு, குறித்த ஒரு நன்னளில் விண்ணப் பத்தைத் தொடங்கி அப்பரடிகளின் திருநாளாகிய சித்திரைச் சதய நாளில் இதனைப் பூர்த்திசெய்யலாம். ஓதுவாமூர்த்திகளையும் தமி ழறிந்த ஏனையோரையும் இவ்வகையில் பயன் படுத்திக்கொள்ளலாம்.

## பல்வகைப் பயன்கள் :

நாள்தோறும் விண்ணப்ப நிறைவில் ஏதேனும் நிவேதனம் வசதிக்குத் தகுந்தாற்போல் அமைத்து வந்திருப்போருக்கு வழங்க லாம். இவ்வாருன விண்ணப்பத்தில் திருமுறைப் பனுவல்களைச் சீர்பிரித்துக் கருத்துச்சிதையாது, கேட்போர்க்குப் பொருள் விளங்க ஓதுதல் இன்றியமையாதது. இதனல் திருமுறையின் சிறப்பும், தமிழின் பெருமையும் இறைவன் கருணையும் விளங்குவதோடு பக்தி யுணர்வும், பண்பாடும் மக்கள்பால் செழிக்கும் இவ்வாறே ஒவ்வொரு திருமுறை ஆசிரியர்களின் திருநாளை ஒட்டி முன்னதாகவே ஏற்பாடு செய்துகொண்டு, ஓராண்டுக்குள் பன்னிருதிருமுறைகளையும் ஒரு முறையாவது இறைவன் திருமுன் விண்ணப்பித்தல் சைவ அன்பர் களின் கடமையாகும். அறநிலையத்துறையினரும், சிவாசாரியர்களும், ஓதுவாமூர்த்திகளும், உள்ளூர் அன்பர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டுத் திருவருளுக்கு உரியவர்களாவதோடு சைவமும் தமிழும் மக்கள் உள்ளத்தே வளர வழிவகுப்பார்களாக.

வாழிய திருமுறை ! வளர்க நம் பக்தர்கள் !!

# மதுரை ஆதீனம் 291-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

# பரிபூரணம்

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 291-வது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்தருளிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருள்மிகு அங்கயற்கண் அம்மை உடனுகிய அருள்மிகு செந்தமிழ்ச் சொக்கன் திருவடி நிழலில் பரிபூரணம் எய்தினுர்கள்.

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீனம் தமிழகத்துச் சைவ ஆதீனங்களிலேயே மிகவும் தொன்மையானது. திருஞானசம்பந்த சுவாமிகள், மங்கையர்க்கரசியாரின் அழைப்பினை ஏற்றுப் பாண்டிநாடு சென்றகாலை, அங்குள்ள திருமடம் ஒன்றில் தம் அடியார்களோடு தங்கியிருந்தார் என்பதனைச் சேக்கிழார்,

" சித்தம் இன்புறும் அமைச்சனுர் திருமடங் காட்டப்
பத்தர் போற்றிடப் பரிசனத்தொடும் இனிதமர்ந்தார்"

என விளக்கியருளுகிருர். அத்திருமடமே திருஞானசம்பந்தசுவாமிகள் வந்து தங்கியிருந்த சிறப்பால் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருமடமென வழங்கலாயிற்று. திருஞானசம்பந்த சுவாமிகளின் காலம் கி. பி. 7 ஆம் நூற்றுண்டு. எனவே திருஞானசம்பந்த சுவாமிகள் அடியார் கூட்டத்துடன் எழுந்தருளியிருந்த அத்திருமடம் பின்னர் மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீனம் என வழங்கப் பெறுகிறது.

திருஞானசம்பந்த சுவாமிகள் கூன்பாண்டியனைச் சைவத்திற்கு மீட்ட காலந்தொடங்கி, இத்திருமடத்துக் குருமகாசந்நிதானங்கள் பாண்டியமரபினைச் சார்ந்த மன்னர்களின் குலகுருவாக விளங்கி வந்திருப்பதாகத் தெரிகிறது. பண்டைக்காலத்தில் மதுரை மற்றும் இராமேஸ்வரம் திருக்கோயில்கள் போன்ற பல பெரிய கோயில்கள் மதுரையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டிருந்ததாகவும் அறியப் படுகிறது. தற்போது திருப்புறம்பயம், திருமுகத்தலை, கைச்சினம், கஞ்சனூர்போன்ற தலத்திலுள்ள சிவாலயங்கள் மதுரை ஆதீனத்தின் அருளாட்சியில் விளக்கமுற்று இருந்துவருகின்றன.

பரிபூரணம் எய்திய 291 - வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி என்பவற்றில் நிரம்பிய புலமையுடையவர்கள். 'மங்கலமாம் திருவேடம்' என்ற சைவ சமயத் திருக்கோலத்தோடு எப்போதும் விளங்கிவந்தவர்கள். விஞ்ஞான பூர்வமாகச் சைவ சமயத்தை விளக்கிப்பேசும் வல்லமை வாய்க்கப் பெற்றிருந்தார்கள். தமிழ்நாடெங்கும், 25 ஆண்டுகளுக்கு மேலாக, நீடித்த தம் அருளாட்சிக்காலத்தில் பயணம் மேற்கொண்டு, எளிய இனிய தமிழில் மக்கள் மனங்கொள்ளுமாறு சைவசமயத்தின் பெருமையினை விளக்கி உரையாற்றிவந்த பெருஞ்சிறப்பு இவர்களுக்கு உரியது.

தமிழ்நாட்டில் வாழும் இஸ்லாமியர், மற்றும் கிருத்துவர்கள் போன்ற பிற மதத்தினர் பலரும், சைவ சமயத்திலிருந்து மதம் மாறிச் சென்றவர்களே. இதனை உணர்ந்து அவ்வாறு பிறமதஞ்சார்ந்த எண்ணாயிரத்திற்குமேற்பட்ட ஆண் – பெண்பாலர்கள் ஆர்வத்தோடு விரும்பிச் சைவசமயஞ்சார எண்ணியபோது அவர்களுக்குத் தீட்சை செய்வித்துச் சைவப் பெயர் சூட்டித் தாய்ச்சமயத்திற்குமீட்ட அரிய பணி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இயற்றிய பணிகளுளெல்லாம் தலையாயது. அன்று திருஞானசம்பந்த சுவாமிகள் மதுரை எழுந்தருளியபோது பல்லாயிரம் சமணர்கள் சைவஞ்சார்ந்தமைபோல, அம்மரபில்வந்த சுவாமிகளும், திருஞானசம்பந்தர் திருமரபு என்பதனை மெய்ப்பிக்கும்வகையில்செய்த இம்மதமாற்றப்பணி நினைவுகூர்ந்து மகிழத்தக்கது.

பல்துறையிலும் விரிந்த அறிவும், அனுபவமும் வாய்க்கப்பெற்ற சுவாமிகள் சித்தமருத்துவம், நாடிசோதிடம், ஆவியுலகம், மறுபிறப்புப்போன்ற பல துறைகளில் ஆய்வுகள் நிகழ்த்தி, குறைந்த விலையில் அனைவரும் பெற்று உய்யுமாறு பல சிறு வெளியீடுகளை இடையறாது வெளியிட்டு மக்களுக்குச் சமயப்பற்றுமிகுமாறுசெய்தவர்கள். நாத்திக வாதம் தமிழகத்தில் தலைவிரித்தாடியகாலத்தில், அஞ்சாநெஞ்சத்தோடு அவர்கள் பல்வேறுமறுப்புக்களையும் எழுதி வெளியிட்டார்கள். திருமுறையிலும் சைவ சித்தாந்தத்திலும் பேரீடுபாடுகொண்டிருந்த சுவாமிகள், இவற்றின் வளர்ச்சிக்காக நூல்கள் வெளியிட்டு ஆக்கமளித்தார்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவையிலும் அங்கம்வகித்து உரிய பங்காற்றினர்கள்,

எந்த நிறுவனம் ஆயினும் தற்காலத்தில் பொருளாதார அடிப்படை இன்றி நின்று நிலவ இயலாது என்பதனைத் திருவுளங்கொண்ட சுவாமிகள், இலங்கையில் வாணிபத்துறையில் தாம் ஈட்டிய பொருளைக்கொண்டு அப்போது நலிவுற்றிருந்த திருமடத்தை வளமுறச்செய்தருளினர்கள். தாம் ஞானபீடமேறியநாள்தொடங்கி திருமடத்தின் வருவாயைப் பெருக்கிட உரிய ஏற்பாடுகள் செய்தருளினர்கள். ஓரளவு நிலையான வருவாய் கிடைக்கும்படி திருமடத்திற்குத் தாவர சங்கம

சொத்துக்களை நிரந்தரமாக்கிய பெருமை இவர்களையேசாரும். ஆதலின் ஆதீன வரலாற்றில் இவர்கள் சிறப்பிடம் பெறுதற்குரியவர்கள். இவ்வாறு இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேலாகச் சைவமும்—தமிழும் தழைத்திட திருவுளம்பாலித்துவந்த மதுரையாதீனம் 291 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம், தம் அடித்தோன்றலாகத் தக்கார் ஒருவரை இளவரசாகநியமித்து ஆதீன அருளாட்சியில் பயிற்சி அளித்து வந்தார்கள். சுவாமிகளின் பரிபூரணத்திற்குப்பின்னர் இளவரசாக விளங்கிய அவர்களே 292 ஆவது குருமகாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள்.

பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் தூய தொண்டுகளை நன்றியுணர்வோடு பக்தர்களும் சீடர்களும் நினைவு கூர்ந்து அஞ்சலிசெலுத்துவதோடு, புதிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாட்சி தழைக்கவும் அவர்கள்பணிசிறக்கவும் உறுதுணையாயிருப்பார்கள் என்றும். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமய வளர்ச்சிக்கு ஒல்லும் வகையிலெல்லாம் பணிசெய்துவருவார்கள் என்றும் நம்புகிறோம்.

---

## பார்வையாளர் குறிப்பு

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### திருக்குறுக்கை ஸ்ரீ யோகீசுவரசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ அப்பர் சுவாமிகளால் பாடல்பெற்ற ஸ்தலமான குறுக்கை வீரட்டானேஸ்வரரையும் தேவி ஞானம்பிகையையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்து மகிழ்ச்சி அடைந்தேன். புராதீனமான ஸ்தலம். ஸ்தல விருக்ஷம் கடுக்காமரம் நன்ருகப் பாதுகாக்கப்பட்டுவருகின்றது. மதன தகனின் பெருமை விளக்கிக் கூறப்பட்டது வேத ஆகம விதிப்படி பூஜைகள் நடந்து சிறப்பித்து வரப்படுகின்றது. நல்ல நேர்மையான நிர்வாகம் அமைத்து விசேஷமாக நடந்துவருகின்றது. கோயில் அன்ருட நிர்வாகத்திற்கு நிதி நிலைமை மிகவும் பலவீனம் அடைந்து வருவதாகச்சொன்னார்கள். அது முக்கியமாய் கவனிக்கப் படவேண்டிய விஷயம். காருண்ய சர்க்கார் உதவி மிகவும் தேவைப் படுகின்றது எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கூட்டிவைக்கப் பிரார்த்திக்கின்றேன். ஓம். சிவ. சிவ. சிவ.

(ஒ - ம்) அ. சோமசுந்தரம்

5—4—80 கீழைத் தஞ்சை மாவட்ட நீதிபதி.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி ஆசிரியைகளும்

மாணவிகளும் சுற்றுலா மேற்கொண்டு

தருமையாதீனத்திருமடத்திற்கு வந்து வழிபாடாற்றியபோது

வழங்கியருளிய

# ஆசியுரை

17—3—80

சுற்றுலா தரும் அறிவு :

சுற்றுலா என்பது சிறந்ததொரு கல்வி ஆகும். பரந்துபட்ட இடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை ஏட்டின்மூலம் கற்பது சிறந்த கல்வியே என்றாலும், அங்கங்கேசென்று அந்தந்தச் சூழலில் அவற்றின் தன்மைகளை நேரில் தெரிந்துகொள்வது அதைவிடச் சிறந்த நடைமுறைக் கல்வியாகும். இந்த அடிப்படையில்தான் கல்வி நிலையங்கள் சுற்றுலா மேற்கொள்கின்றன. அம்முறையிலேயே புதுக்கோட்டை அரசினர் மகளிர் கலைக் கல்லூரியினரும் சுற்றுலா மேற்கொண்டு தருமபுரம், திருக்கடவூர், சிதம்பரம், சீகாழி,வைத்தீசுவரன் கோயில் போன்ற திருக்கோயில்களுக்குச் சென்று வருவது என்று முடிவெடுத்து வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

திருக்கோயில்களுக்குச்சென்று பார்ப்பது என்பதில் பல சிறப்புக்கள் உள்ளன. கலை, பண்பாடு, வரலாறு, பூகோளம், தெய்விகம் என்னும் பலவற்றிற்கு உறைவிடமாகவும் உரிய இடமாகவும் விளங்குவன திருக்கோயில்களாகும். ஆங்காங்கே உள்ள கோயில்களின் சுவர்களிலும் தூண்களிலும் காணும் கலைச்சிறப்பும் முன்னோர்களின் வாழ்க்கையில் பொதிந்துகிடக்கும் பண்பாடும், கல்வெட்டுக்களின் மூலம் காணப்பெறும் வரலாறும், நிலவள நீர்வளத்தின் தன்மையை அறிந்துகொள்ளும் பூகோள அறிவும், இவற்றிற்கெல்லாம் மேலாக

அங்கே எழுந்தருளி அருள்வழங்கும் பெருமானின் தெய்விகமும் என எல்லாவற்றையும் அறிவதும் உணர்வதும் இந்தச் சுற்றுலாவின் முக்கிய நோக்கமாக இருத்தல்வேண்டும்.

## தீராப்பிணி தீர்க்கும் திருக்கோயில்கள்

பல திருக்கோயில்கள் தீராப்பிணி தீர்க்கும் தெய்விக மருத்துவ நிலையமாக விளங்குகின்றன. வைத்தீசுவரன்கோயில், திருவெண்காடு, திருமணஞ்சேரி, திருக்கருகாவூர் போன்ற இடங்கள் முறையே இன்றும் பிணிதீர்த்தல், மகப்பேறு அருளல், திருமணம் கூடிவரல், கருக்காத்தல் போன்ற பல்வேறு மருத்துவ அருள்நிலைக்கூடங்களாக விளங்கிவருகின்றன சுற்றுலாச்செல்வோர் இவற்றை நன்குதெரிந்து தெளிதல் அவசியமாகும்.

## வாழ்வாங்குவாழ வழி தரும் மூன்று :

பெண்கள், வாழ்வில் வளம் பெறவும் இறைவன் அருள் பெறவும் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்பதை அபிராமிபட்டர் வாயிலாகச் சிந்திப்போம்.

" தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சம்இல்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே."

என்பது அபிராமிபட்டரின் அருளியல் சிந்தனை.

மனிதன் மனிதனாக வாழத் தேவைப்படும் இன்றியமையாத பொருள்கள் மூன்று. செல்வம், கல்வி. வீரம் (தைரியம்) என்பன. இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் வாழ்க்கை பிரகாசிக்காது. இவற்றுள் முதலில் வேண்டுவது செல்வமா? வீரமா? என்பது சிந்திக்கற்பாலது. நவராத்திரி விழாவில் வீரம் முன்பும் பின்னர் செல்வமும் அதன்பின்னர் கல்வியும் வைத்து அமைத்திருக்கின்றார்கள். வீரம் வரவேண்டுமாயின் செல்வம் வேண்டும் என்பதனால் ' தனம்தரும் ' என்று அபிராமிபட்டர் முதற்கண் செல்வத்தைத் தொடங்குகின்றார். துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி எனும் அமைப்பினை லட்சுமி, சரஸ்வதி, துர்க்கை என மாற்றி அமைக்கின்றார்.

முதற்கண் உள்ள செல்வத்தை அடைந்துவிட்டாலும் அவற்றை நல்லவகையில் பயன்படுத்தி, உயிர்வளர்ச்சிக்கும் வாழ்க்கை வசதிக்கும் தேவையான பல நல்ல காரியங்களைச் செய்வதற்குக் கல்வி

அவசியமாகிறது. செல்வமும் கல்வியும் சேர்ந்து அமைந்தாலும் நல்ல பல காரியங்களைச் செய்து முடிப்பதற்கு உறுதியான தளர்வறியாத மனம் வேண்டும்.

## தெய்வவடிவும் எய்தப்பெறலாம் :

இவை மூன்றும் ஒரு மனிதனின் வாழ்வில் அமைந்துவிடுமானல் முழுமனிதநிலை கிடைத்து வாழ்வாங்கு வாழ அவை வழிவகுக்கும். குறைவிலா வாழ்க்கையையே வாழ்வாங்கு வாழ்தல் என்பர். வாழ்வாங்கு வாழும் நிலையினை எய்தப்பெற்ருல் தெய்வமென மதிக்கும் வடிவும் தகுதியும் பெறுவது உறுதியாகும். அதனுல்தான் அபிராமி பட்டர்,

" தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியாமனம் தரும் " என்று கூறிப் பின்னர், " தெய்வ வடிவும் தரும் " என்று கூறுகின்ருர், திருவள்ளுவரும்,

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

என்கின்ருர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது தெய்வ நிலை பெறுதற்கு ஓர் அடிப்படை என்பதனை இரண்டு சான்ருேர்களும் இணைந்தே கூறியுள்ளனர்.

## நல்லினத்தின் சிறப்பு

இவ்வுலகில் இவை கிடைத்தாலும் அவை நிலைபெறத் தேவையானது நல்ல கூட்டுறவு ஆகும். மேற்கண்டவை இருந்து நல்ல இனமும் அமைந்துவிடுமானல் மேன்மேலும் வளர்ச்சி அடைய வழியுண்டு. கரவாடும் வன்னெஞ்சக் கள்வர்கள் ஒருநாளும் நம்மோடு உறவாடாமல் இருக்க அபிராமியின் பரிபூர்ண அருள் தேவை என்கின்ருர் அபிராமிபட்டர். இப்படி எண்ணிக்கொண்டே போகலாம் ஆதலின் அவற்றை எல்லாம் அடக்கி, " நல்லன எல்லாம் தரும் " என்கிருர்.

## முயற்சி எப்படி வரும் ?

இவை அனைத்தையும் மனிதனே தன் முயற்சியால் பெற முடியாதா ? என்ற கேள்வி எழும். முயற்சி இருந்தால் உறுதியாகப் பெறலாம்.

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்பதும்,

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்பதும் வள்ளுவர் வாக்கு. ஆனால் இந்த முயற்சியும் விதிவசத்தாலன்றி விளையாது என்பதைச் சிந்திக்கவேண்டும். அதனால் தான் திருவள்ளுவர், முயற்சி, எல்லாவற்றையும் தரும் என்றாலும் அந்த முயற்சியும் அவரவர் வினைவழியேதான் தோன்றும் என்றார். வினை என்பது அவரவர் முன்செய்த செயலாகும். இக்கருத்தை,

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி"

என்னும் குறளால் விளக்குகின்றார் இங்கு 'அசைவின்மை' என்பதற்கு 'முயற்சி' என்று பொருள் எழுதுவர் பரிமேலழகர். ஆதலின் முயற்சி வருவதற்கு அவரவர் வினையும் அதைச் செலுத்தும் ஆண்டவனின் அருளும்தான் காரணம் என்பதனை வள்ளுவர் இக்குறள் மூலம் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார். எனவே முயற்சியும் அவன் அருள்வழியேதான் உண்டாகும்.

## அன்பர் என்பவர் யார்?

இங்ஙனம் உள்ள நன்மைகளை அடையும் தகுதி யாருக்குண்டு? என்பதற்கு விளக்கம் கூறுவார் போல, "அன்பர் என்பவர்க்கே" என்கின்றார் அபிராமிபட்டர். அன்பர் என்பவர் யார்? ஆண்டவனிடத்தில் அசைவிலா அன்புடையவரே அன்பராவார். அவனிடத்தில் அன்பு இருக்குமானால் அவ்வன்பு மற்ற தகுதிகளைப் படிப்படியாக நாளடைவில் வளர்க்கும்.

நல்லனவே செய்து அல்லன அகற்றி வாழ்வோரும், பிறஉயிரையும் தம்உயிர் போல் நினைத்து வாழ்வோரும், தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு பிறஉயிருக்கு வரும் துன்பங்களைத் துடைத்து வாழ்வோரும் எல்லா உயிரும் இன்புற்றிருக்கவேண்டும் என்று எண்ணி வாழ்வோரும், எந்நிலையில் நின்றாலும் அந்நிலையில் இறையுணர்வு வழுவாது நிற்போரும், துன்பத்தைக் கண்டு துவண்டு போகாமலும் இன்பத்தைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாமலும் வாழ்வோரும், பிறருக்கு ஒருநிலை தமக்கு ஒருநிலை என்று எண்ணாமல் வாழ்வோரும் என இத்தகையோரே அன்பராவார்.

இந்த அன்பராவார்க்கு அபிராமியின் கடைக்கண்களே அருள் பாலிக்கும். மேற்சொன்ன யாவற்றையும் தருவது இறையருள் என்றோ அம்மையின் அருள் என்றோ கூறாது அபிராமி கடைக்கண் களே அருளும் என்று பாடிய காரணம்யாது? அன்னையின் அளவிறந்த அருளாற்றல் நேரே பாய்ந்தால் உயிர்கள் தாங்காது. எனவே உயிர் களின் தகுதி நோக்கிச் சிறிதுசிறிதாக வழங்கி உயிர்களை உய்விப்ப பவள் என்பதைப் புலப்படுத்தவே கடைக்கண்களே நல்லன எல்லாம் தரும் என அருளினர்.

## இணைபிரியா இயல்பு :

எனவே தனமும் நல்லமனமும் பொருந்திய இனமும் பெற்று வாழ்வாங்குவாழ இறையோடு இணைபிரியாமல் இருக்கின்ற அபிரா மியை நாளும் தொழுது எழுந்து பணிந்து வணங்கி வாழ்ந்து வருதல் வேண்டும். தண்ணீரும் குளிர்ச்சியும், மலரும் மணமும், தீயும் வெம்மையும் எங்ஙனம் பிரிப்பின்றி சேர்ந்துநின்றே பயனளிக்கின் றதோ அதுபோன்றே அம்மையும் இறையோடு கலந்துநின்றே அருளு கின்றாள் என்பதனை உள்ளடக்கியே அபிராமிபட்டர் அம்மையின் கருணையே அனைத்தும் நல்கும் என்கின்றார்.

## மறைவில் இருக்கும் மாண்புடைப் பொருள்கள் :

பெண்களாயிருப்போர்கள் சிலவற்றைச் சிந்தித்துவாழவேண்டும். ஒரு கட்டிடத்தின் முக்கியமான பகுதியாக அஸ்திவாரம் உள்ளது. ஒருமரத்தின் முக்கியமான பகுதியாக வேர் உள்ளது, ஒரு அரசின் முக்கியமான பகுதியாக செயலகம் உள்ளது. ஒருசமுதா யத்தின் முக்கியமான பகுதியாகச் சான்றோர்கள் இருக்கின்றனர். உலோகங்களில் முக்கியமானதாக உள்ளது பொன். உலகத்திற்கு முக்கியமானவராகக் கடவுள் இருக்கிறார். இப்படி முக்கியமான பொருள்களெல்லாம் மறைந்தும், பின்னிருந்தும் அவ்வப்பொருள்களை இயக்கியும் நிலைநிறுத்தியும் விளங்குகின்றன. அதுபோலவே குடும்ப வாழ்விற்கு முக்கியமான மனைவியாக இருக்கின்ற பெண்கள் எப்படி வாழவேண்டும் என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன.

மரத்தின் முக்கியமான பகுதியாகிய வேர் எங்ஙனம் மறைந்து நின்றே முக்கியத்துவம் பெற்றுப் பயன்தருகிறதோ அதேபோன்று பெண்களும் மறைந்திருந்தே பயனளிக்கத்தக்கவர்கள். சேக்கிழார் இக்கருத்தில்தான் சிறுத்தொண்டர் புராணத்தில் திருவெண்காட்டு நங்கையைக் கூறவந்தபொழுது,

> " ......................................மனையறத்தின்
> வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
> சீராள தேவர்எனும் திருமைந்தர் அவதரித்தார் "

உ

## தருமையாதீனத்தில்

# சமயப் பயிற்சி வகுப்பு

## அறிவிப்பு

தருமை ஆதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவை ஒட்டி வழக்கம்போல் இவ்வாண்டும் 26—5—80 முதல் 4—6—80 முடிய பத்து நாட்களுக்குத் தருமையாதீனத் திருமடத்தில் சமயப்பயிற்சி வகுப்பு நடைபெற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பாலித்திருக்கிறார்கள்.

பட்டப்படிப்பிற்குக் குறையாத கல்வியும், சமயத்தில் ஈடுபாடும் கொண்ட ஆண் - பெண் இருபாலரும் இவ்வகுப்பில் கலந்துகொண்டு பயன் பெறலாம். சமயத்துறையில் அனுபவமுள்ள அறிஞர் பெருமக்களால் வகுப்புக்கள் முறையாக நிகழ்த்தப்பெறும். உணவும், உறையுளும் இலவசமாக வழங்கப்பெறும்.

பங்கேற்க விரும்புவோர் தனித்தாளில் தங்கள்பெயர், தந்தையார் பெயர், வயது, முகவரி, கல்வித்தகுதி, ஆற்றிவரும்பணி, இதற்குமுன் தருமையாதீனச் சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டதுண்டா என்ற விபரம், சமயத்துறையில் மேற்கொண்டிருக்கும் ஆக்கப் பணிகள் இவற்றைத் தெளிவாக எழுதி, **மேலாளர் தருமையாதீனம் தருமபுரம் மாயூரம் 609 001** என்ற முகவரிக்கு **ரூபாய் பத்து பொறுப்புக்கட்டணம் பணவிடைசெய்த அஞ்சலக ரசீதையும்** உடன் இணைத்துத் தங்கள் விண்ணப்பப் படிவத்தை மேமாதம் 10 ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும். ஆதீனத்திலிருந்து அனுமதிக் கடிதம் பெற்றவர்கள் தங்கள் சொந்தச் செலவில் தருமைக்கு வந்து, சமயப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயன் பெறலாம்.

தருமையாதீனம்
தருமபுரம்
மாயூரம் 609 001

**மேலாளர்**

# திருக்கோட்டாறு, திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில், திருஅம்பர்மாகாளத் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,**

தஞ்சைத்தரணி தெய்வமணம் கமழச் செய்யும் திருக்கோயில் பலவற்றைப் பெற்று விளங்கும் சிறப்புடையது. இம்மாவட்டத்தில் பாடல் பெற்ற சிவதலங்கள் பல உள்ளன.

திருக்கோட்டாறு, திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில், திருஅம்பர் மாகாளம் ஆகிய மூன்று தலங்களும் இம்மாவட்டத்தைச்சேர்ந்தவை.

## 1. திருக்கோட்டாறு

இத்தலம் திருக்கொட்டாரம் என வழங்கப்படுகிறது. பேரளத்தி லிருந்து காரைக்கால்செல்லும் புகைவண்டித்தொடரில் அம்பகரத்தூர் நிலையத்தில் இறங்கி வடகிழக்கே 2½ கி. மீ. தூரம் வந்தால் இத் தலத்தை அடையலாம். பேருந்துகளில் வருவோர் கொல்லுமாங்குடி காரைக்கால் பேருந்துச்சாலையில் மாயூரம்-காரைக்கால், கும்பகோணம்-காரைக்கால் செல்லும் பேருந்துகளில் வந்து திருக்கொட்டாரத்தில் இறங்கித் தெற்கே ஒரு கிலோ மீட்டர் தூரம் வந்தால் இத்தலத்தை அடையலாம். பேருந்துகளில்வருதலே எளிமையானது.

**தலப்பெருமை :** இத்தலம் தேவாரப்பாடல்பெற்ற சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 53 ஆவது தலமாக விளங்குவது. கோட்டாறு என்பது தலத்தின் பெயர். கோடு-கரை. வாஞ்சியாற்றின் கரையில் விளங்குவதால் இத்தலம் கோட்டாறு எனப்பட்டதாகலாம். வெள்ளையானை தன்கோட்டினால் மேகத்தை இடித்து மழையை ஆறு போலச் சொரிவித்து வழிபட்டதால் கோட்டாறு என இத்தலம் பெயர் பெற்றது எனவும் கூறலாம்.

வெள்ளையானை பூசித்துப் பேறுபெற்றதலம் என்பதை இத்தலத் தேவாரத் திருப்பாடலும் குறிப்பிடுகிறது.

" நின்று மேய்ந்து நினைந்து மாகரி நீரொடும் மலர்வேண்டி வான்மழை
குன்றின் நேர்ந்து உகுத்திப் பணிசெய்யும் கோட்டாறு"

எனக் குறிப்பிட்டருளுகின்றார் திருஞானசம்பந்தர். அகத்தியர், சுபகமுனிவர், குமாரபுவனதேவர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது இத்தலம்.

**மூர்த்திகள் :** விநாயகர் பாலவிநாயகர். இவர்கோயிலின் வாயிவில் எழுந்தருளியுள்ளார். சுவாமிபெயர் அருள்மிகு ஐராவதேசுவரர். அம்பாள் திருப்பெயர் அருள்மிகு வண்டமர்பூங்குழலி. அம்மையின் திருப்பெயரை ஞானசம்பந்தர் 'வண்டமரும் குழல் மங்கை நல்லாளொரு பங்கனும்' எனத் தேவாரத் திருப்பாடலில் குறிப்பிட்டருளுகின்றார்.

**கோயிலமைப்பு :** திருக்கோட்டாறு பெரியகிராமம். திருக்கோயில் கிழக்குநோக்கி உள்ளது. மூன்றுநிலைக்கோபுரம் கோயிலுக்கு அழகு செய்கிறது. கோபுரவாயிலை அடுத்துப் பிராகாரம் உள்ளது. கொடிமர விநாயகரை வழிபட்டு வாயிலில் உள்ள பாலகணபதியைத் தரிசித்து வலம்வரலாம். மேற்கே கன்னிமூலையில் கன்னிவிநாயகர் விளங்குகின்றார். அடுத்துள்ள மண்டபத்தில் கைலாசநாதர், சமயாசாரியர், சடைமுடியோடுகூடிய சுபகமுனிவர் முதலியோர் திருவுருவங்கள் உள்ளன. அடுத்து முருகன் கோயில் உள்ளது.

கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தியும், மேற்கே அர்த்தநாரீசுரரும், வடக்கே பிர்மாவும் உள்ளனர். வடபால் சண்டேசுரர்கோயிலுள்ளது. கிழக்கே யாகசாலையையடுத்துப் பைரவர் சூரியசந்திரர் உள்ளனர்.

முன்மண்டபத்தில் அம்பாள் கோயில் தெற்குநோக்கி உள்ளது. மகாமண்டபத்தில் சோமாஸ்கந்தர் நடராசர் மற்றும் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளனர். அர்த்தமண்டபத்தையடுத்துக் கர்ப்பக்கிருகம் விளங்குகின்றது. அர்த்தமண்டபத்தில் பல்லாண்டுகளாகத் தேனீக்கள்கட்டிய பழமையான பெரிய தேனடை உள்ளது. இறைவன் சந்நிதியில் நிரம்பத் தேனீக்கள் ரீங்கார ஓசை செய்வதைக் கேட்கலாம். அம்மை வண்டமர்பூங்குழலி என்பதற்கேற்ப, சுவாமி அருகில் அம்மையிருந்து வழிபடுவதுபோன்ற குறிப்பை இது நமக்கு உணர்த்துகிறது. 'கொம்பமரும் வண்டு கெண்டும் திருக்கோட்டாறு' எனும் இத்தலத்தேவாரத்திலும் குறிப்பிடப்பெறுவதைக் காணலாம்.

சுவாமிசந்நிதி மிக்க அழகோடும் தெய்வீகப்பொலிவோடும் திகழ்கிறது. நம் உள்ளத்தைக் கவர்கிறது.

" நின்றுமேய்ந்து நினைந்துமாகரி நீரொடும்மலர் வேண்டிவான்மழை
குன்றின்நேர்ந்து உகுத்திப்பணிசெய்யும் கோட்டாற்றுள்
என்றுமன்னிய எம்பிரான்கழல் ஏத்தி வானரசு ஆளவல்லவர்
பொன்றுமாறு அறியார் புகழார்ந்த புண்ணியரே "

என்ற பாடலை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடையலாம். அம்மை அருளே திருவுருவாய் விளங்குகின்றார். முன் மண்டபத்திற்கு அருகில் குமாரபுவனேசுவரர்கோயிலுள்ளது. மேற்குநோக்கிய பெரிய சிவலிங்கம் இங்குள்ளது.

**வெள்ளையானை வழிபட்டது :** ஐராவதம் சுவர்க்கலோகத்தில் இந்திரனுக்கு வாகனமாக உள்ள யானை. வெண்மைநிறமும் நான்கு கொம்புகளும் உடையது. ஒருமுறை துர்வாச முனிவர் காசியில் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு இறைவனுக்குச் சாத்திய தாமரை மலரொன்றை யானைமீது அமர்ந்து பவனிவரும் இந்திரன் கையில் கொடுத்தார். செல்வச்செருக்கால் இந்திரன் அம்மலரை ஒருகையால் வாங்கி யானைமீது வைத்தான். யானை அம்மலரைத் துதிக்கையால் கீழேதள்ளிக் காலால் தேய்த்தது. துர்வாசர் இந்திரனையும் யானையையும் சபித்தார். அவர் சாபப்படி ஐராவதம் காட்டானையாகி நூறு ஆண்டுகள் பல தலங்களுக்கும்சென்று இறைவனைவழிபட்டு மதுரையில் இறைவனருளால் பழையவடிவம் பெற்றது என்பது திருவிளையாடற் புராண வரலாறு. ஐராவதம் காட்டானையாய் வழிபட்டதலங்களில் திருக்கோட்டாறும்ஒன்று. இத்தலத்தைப்பற்றிய வேறு புராண வரலாறுகள் அறியக்கூடவில்லை.

**திருப்பதிகங்கள் :** இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. மற்றும் திருநாவுக்கரசர் தேவாரத்தில் 6 - 70 - 3, 6 - 71 - 10 ஆகிய இருதிருத்தாண்டகப்பாடல்களில் இத்தலம் குறிப்பிடப்படுகிறது.

**கல்வெட்டு:** இக்கோயில் கல்வெட்டுக்களில் இவ்வூர் இராசராசப் பாண்டிநாட்டு உத்தமசோழ வளநாட்டு நாஞ்சில்நாட்டுக் கோட்டாறுனமும் முடிச்சோழநல்லூர் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப்பெயர் இராசேந்திர சோழீசுவரமுடைய மகாதேவர் என்பதாகும். இக்கோயிலைக் கட்டுவித்தவன் சோழமண்டலத்து மண்ணிநாட்டு முழையூருடையான் அரையன் மதுராந்தகனை குலோத்துங்கசோழ கேரள இராசன் ஆவன். இக்கோயிலில் குன்றமெறிந்த பிள்ளையாருக்கு நாச்சியாரை எழுந்தருளுவித்தவர், தேவரடியார் செங்கோடன் பூவாண்டியாவர். இதுநிகழ்ந்தது கொல்லம் ஆண்டு 428. அதாவது கி. பி. 1253

ஆகும். இந்த இராசேந்திரசோழீச்சரமுடையார்கோவிலின் மண்டபத்தைக் கட்டுவித்தவர் ஸ்ரீகோயிலிற் பள்ளியுடைய பெரியான் குடிதாங்கியான சுந்தரபாண்டிய நாஞ்சில்நாடு ஆழ்வார் ஆவர். இதில் பள்ளியுடையான் என்பது கோவில் கண்காணிப்பாளரைக் குறிப்பதாகும்.

சடையவர்மன் சுந்தரசோழ பாண்டிய தேவரின் 11 ஆம் ஆண்டில் விஷ்ணுவர்த்தன மகாராஜாவாகிய சளுக்கு விஜயாதித்தன் விக்கண்ணன் இராசேந்திர சோழீச்சர முடையாருக்குக் நிசதி உழக்கு நெய் அட்டுவதற்கு இருபத்தைந்து சாவாமூவாப்பசுவை வைத்துள்ளான் இம்மன்னனது இதே ஆண்டில் பெருந்தனத்துத்தேவன் விச்சாதிரனான சோழமாராயன் சாவாமூவாப்பேராடு ஐம்பதை நிசதம் உழக்கு நெய் வார்த்து ஒரு விளக்கு எரிப்பதற்கு வைத்துள்ளான். இம்மன்னனது இதே ஆண்டில் இராசராசத் தென்னாட்டுக் கொடுங்குளத்து ஆதித்தன் இரணசிங்கனான வீரபாண்டிய பல்லவரையன் நொந்தாவிளக்கினுக்கு ஐம்பது ஆடுகளை விட்டுள்ளான். இவ்வூரில் இருந்த பெண்தவசி நாற்பத்தெண்ணாயிரம் மறலிதேவி அரைவிளக்கு ஒன்றுக்குப் பன்னிரண்டு பசுக்களைவிட்டிருந்தாள்.

"புகழ்சூழ்ந்தபுணரி" என்னும் தொடக்கமுள்ளமெய்க்கீர்த்தியையுடைய முதலாம் குலோத்துங்கசோழன் காஞ்சிபுரத்து அரண்மனையில் இருந்து ஆந்தாய்க்குடி என்னும் ஊரில் இராசேந்திரசோழீச்சரமுடையாருக்கு வேண்டும் நிவந்தங்களுக்கு நாற்பத்தைந் கரையேமும்மா அரை நிலத்தை அளித்திருந்தான்.

## 2. திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

இத்தலம் அம்பர் என வழங்கப்படுகிறது. மாயூரம் – திருவாரூர் புகைவண்டித் தொடரில் பூந்தோட்டம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பூந்தோட்டத்திலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்துச்சாலையில் உள்ள இத்தலத்திற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. காரைக்காலிலிருந்தும் பூந்தோட்டத்திலிருந்தும் இத்தலத்திற்குப் பேருந்துகளில் செல்லலாம். அரிசிலாற்றின் வடகரையில் கோயில் அமைந்துள்ளது. பிரமபுரி, புன்னாகவனம் முதலிய பெயர்களை உடையது.

**தலப்பெருமை:** பெருந்திருக்கோயில் என்பது யானையேறுதவாறு படிக்கட்டுகள் அமைத்துக் குன்றுபோல்செய்யப்பட்ட மாடக்கோயில் என்பது பொருளாகும். கோச்செங்கட்சோழ மன்னரால் திருப்பணி செய்யப்பெற்ற மாடக்கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இத்தலத் தேவாரப்பாடல்களிலும் திருஞானசம்பந்தர் இதனைக் குறிப்பிட்டருள்கின்றார்.

"அம்பர்மாநகர் குரிசில் செங்கண்ணவன் கோயில்", "அம்பர்ச் செம்பியர் செய்யகண் இறை செய்த கோயில்", "அம்பர்மாநகர், செங்கண் நல் இறைசெய்த கோயில்", "செம்பியர் செறிகழலிறை செய்த கோயில்" என்பன இவ்வரலாற்றைக் குறித்த இத்தலத் தேவாரப்பகுதிகளாகும்.

தேவாரப்பாடல்பெற்ற சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலங்களில் இது 54 ஆவதுதலம். திருஞானசம்பந்தர் அருளிய அரியதொரு திருப்பதிகம் இத்தலத்திற்குள்ளது. சோமாசிமாற நாயனூர் அவதரித்ததலம் பிரமன், அம்பரன், அம்பன், விமலன், மன்மதன், கோச்செங்கட்சோழர் முதலியோர் வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

**கோயிலமைப்பு**: பேருந்துசாலையின் தென்பால் அரிசிலாற்றின் வடகரையில் கிழக்குநோக்கி அமைந்துள்ளது கோயில். கோயிலின் எதிரில் இந்திரதீர்த்தம் உள்ளது. கோயிலின் நுழைவாயிலில் மூன்று நிலை இராஜகோபுரம் விளங்குகிறது. கீழே ஒரு பிராகாரமும் மலைமேல் ஒரு பிராகாரமும் உள்ளன. கோபுரவாயிலை அடுத்துள்ள வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்குமூலையில் தலமரம் புன்னையுள்ளது. ஆதிபிரமபுரீசுரரும் இத்தலத்தின் புகழ்பெற்ற அன்னமாம்பொய்கையும் (கிணறு) உள்ளன. மேற்கே கன்னிமூலையில் தலவிநாயகரும், அடுத்து முருகனும், அடுத்து மகாலட்சுமியும் தனித்தனிக் கோயில்களில் உள்ளனர். மலைக் கோஷ்டங்களில் தெற்கே விநாயகரும், மேற்கே திருமாலும், வடக்கே பிரமனும் துர்க்கையும் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் சண்டேசர்கோயிலும், அடுத்து அகிலாண்டேசுவரர்கோயிலும் உள்ளன. கிழக்கே பைரவர், சூரியன் உள்ளனர். கிழக்குப் பிராகாரத்தில் அம்பிகைகோயில் தனிக்கோயிலாக உள்ளது. வலமாகவந்து நந்தி (சுதை) பலிபீடங்களை வணங்கி மலையேறும் வாயிலிலுள்ள படி விநாயகரை வழிபட்டு மலைமேல் ஏறிச்செல்லலாம். மலைமேல் உள்ள திருச்சுற்றை வலம்வரும்போது தெற்கே தக்ஷிணாமூர்த்தியை வழிபடலாம்.

மலைக்கோயில் அடுத்தடுத்து இரண்டு பிரிவாக உள்ளது. முதல் விமானத்தில் சோமாஸ்கந்தரும் இரண்டாம் விமானத்தில் பிரமபுரீசுவரரும் விளங்குகின்றனர். தலத்திருப்பதிகம் சுவாமிசந்நிதியில் சலவைக்கல்லில் பொறித்துப் பதிக்கப்பெற்றுள்ளது. சுவாமிசந்நிதியை அடையும்போது முன்மண்டபத்தில் இத்தலத்துக்குரிய ஸ்ரீ நடராசர் விளங்கும் சபையைத் தரிசிக்கலாம். அர்த்தமண்டபத்தில் விநாயகர், துவாரபாலகர் உள்ளனர்.

கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கத்திருமேனியோடு விளங்கும் பிரமபுரீசுவரரைத் தரிசிக்கலாம். அவருக்குப்பின்னுல் பார்வதிதேவியும் சிவபெருமானும் நடுவே முருகனும் எழுந்தருளியுள்ள காட்சியைத் தரிசிக்கலாம்.

வலப்பாகத்தில் சோமாஸ்கந்தர் சந்நிதி உள்ளது. இத்தலத்திற்குரிய உற்சவமூர்த்திகளில், பிரமனும் பிரமனுக்குக் காட்சிகொடுக்க எழுந்தருளும் பெருமானும் தரிசிக்கத்தக்க மூர்த்திகளாவர். மலைமேல் உள்ள கீழ்நடை மண்டபத்தில் வடக்கே நவக்கிரகங்களும், சமயாசாரியர், பிரமன், கலைமகள் திருவுருவங்களும் உள்ளன. கீழேயிறங்கி அம்பாள்கோயிலை அடையலாம். அம்பிகை சுகந்தகுந்தளாம்பிகை எனப்பெறுவர். வேண்டுவார் வேண்டுவதை ஈந்துவரும் இவ்வம்மையின் கோயில் தனிச்சிறப்போடு திகழ்கிறது.

**மூர்த்திகள் :** இறைவன் திருப்பெயர் ஸ்ரீபிரமபுரீசுவரர், ஸ்ரீ அம்பரீசர், ஸ்ரீமாரபுரீசுவரர் எனவும் கூறப்படுவார். அம்பிகைதிருப்பெயர் ஸ்ரீசுகந்தகுந்தளாம்பிகை என்பது. ஸ்ரீபூங்குழல்நாயகி, ஸ்ரீவண்டமர் பூங்குழலி, ஸ்ரீவம்பவனப்பூங்குழலி எனவும் கூறப்படுவார். இத்தலத் திருப்பதிகத்தில் ஞானசம்பந்தர் பாடல்தோறும் இறைவனது நடனத்தைப் புகழ்ந்து ஏத்துவதற்கொப்ப நடராசப்பெருமான் பேரழகு பொருந்திய மூர்த்தியாக விளங்குகிறார். தலமரம் - புன்னை, தீர்த்தம் - இந்திரதீர்த்தம், அன்னமாம்பொய்கை, சூலதீர்த்தம் ஆகியன.

## புராண வரலாறுகள்

இத்தலத்திற்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் தலபுராணம் உள்ளது. அதில் கூறப்பெற்றுள்ள புராண வரலாற்றுச் செய்திகள் சுருக்கமாகத் தரப்படுகின்றன. விரிவான தல வரலாறு தேவஸ்தானத்தில் உள்ளது

**பிரமன் வழிபட்டது :** திருமால் பிரமன் ஆகிய இருவரும் தாமே பிரமம் எனத் தம்முள் மாறுபட்டபோது இருவரிடையே அழலுருவாய் ஓங்கிநின்றான் இறைவன். இவ்வனற்பிழம்பின் அடியையோ முடியையோ காண்பவரே உலகின் முழுமுதல்வர் என்று கூறிய இறைவனது உரையின்படி திருமால் பன்றியுருக்கொண்டு அடியைக்காணப் புறப்பட்டுத் தேடித் தன் இயலாமையை இறைவனிடம் தெரிவித்து நின்றார். பிரமன் அன்னமாய்ப்பறந்து சென்று முடியைக்காணாமலே கண்டதாகப் பொய்யுரை கூறிநின்றார். பெருமான் பிரமனை அன்னமாகும்படிச் சபித்தார் பிரமன் பிழைபொறுக்க இறைவனை வேண்டினான். பெருமான் புன்னாகவனம் என்னும் இத்தலத்தை அடைந்து தவஞ்செய்யுமாறு கூறினார். பிரமனும் அவ்வாறே இத்தலத்தை அடைந்து பொய்கையொன்று உண்டாக்கி அதன் நீரால் இறைவனை மஞ்சனமாட்டிப் பல்லாண்டுகள் வழிபட்டு அன்ன உருவம் நீங்கிப் பழைய திருவுருவம் பெற்றுப் படைப்புத்தொழிலை மேற்கொண்டான். பிரமனுக்கு இறைவன் அருட்காட்சிவழங்கிய ஐதிகவிழா ஆண்டு தோறும் மாசிமகத்தன்று நிகழ்கிறது.

**அம்பராம்பரர்களை அழித்தது :** துர்வாசமுனிவர்க்கு மதலோலா என்ற தேவகன்னிபால் தோன்றிய அம்பரன் ஆம்பரன் ஆகிய இருவரும் தாங்கள் பெற்ற தவவலிமையால் உலகிற்கு இடையூறு விளைத்துவந்தனர். பெருமான் கட்டளைப்படி அம்பிகை காளியை நோக்கினாள். காளி கன்னியுருவோடுவந்தாள். இருவரும் அம்மையைச் சாதாரணப்பெண் எனக்கருதி அவரை அடையச் சண்டையிட்டனர். மூத்தவன் இறந்தான். இளையவனைக் காளி கொன்றாள். காளி அம்பரனைக்கொன்ற இடமே அம்பகரத்தூராகும். கொலைப்பழி தீரக் காளி திருமாகாளத்தில் இறைவனைப் பூசித்து அருள் பெற்றார்.

**சம்காரசீலனை அழித்தது :** சம்காரசீலன் ஒரு அரக்கன். தேவர்கள் இவ்வரக்கனுக்குப் பயந்து பிரமன் கட்டளைப்படி இத்தலத்தில் குடியேறினர். இறைவன் தேவர்களைக்காக்கக் காலபைரவரை ஏவி அவனைக்கொன்று அமரர்கட்கு அருள்புரிந்தார்

**விமலன் அருள்பெற்றது :** விமலன் என்ற அந்தணன் தீர்த்த யாத்திரை செய்துகொண்டே இத்தலத்தில்வந்து தங்கிப் பல்லாண்டுகள் வழிபட்டான். காசிக்கங்கையை இறைவன், இங்கு வரச்செய்து வேண்டும் வரங்கள் அருளினான்

**மன்மதன் சாபம் நீங்கியது :** மன்மதபாணம் பலிக்காமல்போகக் கடவது என்று கூறிய விசுவாமித்திரரின் சாபம் நீங்க மன்மதன் இத்தலத்தை அடைந்து வழிபட்டுச் சாபநீக்கம் பெற்றான்.

**நந்தராசன் பிரமகத்தி நீங்கியது :** நந்தகூபன் என்னும் அரசன் புலித்தோலுடுத்த முனிவரைப் புலியெனக்கருதி அம்புவிடுத்த குற்றத்தினால் பிரமகத்தி தொடரப்பட்டு இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுப் பிரமகத்தி நீங்கப்பெற்றான் இத்தலத் திருக்கோயிலைத் திருப்பணிசெய்தும் விழாக்கள் நடத்தியும் மகிழ்ந்தான்.

**கோச்செங்கட்சோழ நாயனார் :** திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழிருந்த ஜம்புகேசுவரரை முற்பிறப்பில் சிலந்தியாயிருந்து வழிபட்ட பெரும்பேற்றால், கோச்செங்கட் சோழமன்னராகப் பிறந்து யானை ஏறாத எழுபது மாடக்கோயில்களைக் கட்டியவர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். அம்மன்னர்செய்த கோயிலே இது. ஜம்புகேசுவரர் ஆலயமும் இக்கோயிலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**திருப்பதிகங்கள் :** இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அப்பரோடு எழுந்தருளி அருளிச்செய்த ஒரு திருப்பதிகம் உள்ளது. மற்றும் ஞானசம்பந்தர் தேவாரத்தில் 2-39-5 திருநாவுக்கரசர் தேவாரத்தில் 5-62-7, 6-7-7, 6-22-4 6-51-10, 9-70-4, 6-87-3 ஆகிய திருப்பாடல்களிலும் இத்தலம் குறிப்பிடப்படுகிறது.

**கல்வெட்டு :** இத்திருக்கோயிலில் நான்கு கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் சோமஸ்கந்தர் கோயிலிலிருக்கும் இராச ராசதேவரின் பத்தாமாண்டுக் கல்வெட்டுநீங்கலாக ஏனையவை துண்டு துண்டான கற்களில் வெட்டப்பெற்றனவாகும். மேற்குறித்த இராச ராசதேவரின் கல்வெட்டு உய்யக்கொண்டார் வளநாட்டு, அம்பர் நாட்டு வைகாவூராகிய எதிரிலிச் சோழநெற்குன்றத்தில் எழுந்தருளி யிருக்கும் எதிரிலிச்சோழீச்சரமுடையார்க்கு அம்பர் என்னும் இவ்வூரி லுள்ள ஒரு வணிகன் இரண்டு விளக்குகள் கொடுத்ததைத் தெரிவிக் கின்றது. ஏனைய துண்டுக் கல்வெட்டுக்கள் இராசராச தேவரின் ஐந்து, ஒன்பது இராச்சிய ஆண்டுகளில் நிலங்கள் ஏலத்திற்கு விடப்பட்டதையும், மூன்றாங்குலோத்துங்க சோழன். மதுரையும், ஈழமும், கருவூரும், பாண்டியன் முடித்தலையும் கொண்டதையும், அம்பர்நாட்டில் மேலூராகிய அரித்துவநெற்குன்றம் என்னும் ஊர் உள்ளதையும் தெரிவிக்கின்றன.

## 3. திருஅம்பர்மாகாளம்

மாயூரம் — திருவாரூர் புகைவண்டித்தொடரில் பூந்தோட்டம் இரயில் நிலயத்திற்குக் கிழக்கே மூன்று கிலோமீட்டர்தூரத்திலுள்ளது இத்தலம். பூந்தோட்டத்திலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்துச் சாலையிலுள்ளது காரைக்காலிலிருந்தும் பூந்தோட்டத்திலிருந்தும் பேருந்துகளில் இத்திருத்தலத்தை அடையலாம்.

**தலப்பெருமை:** இது காளி வழிபட்டதலம். சோமாசிமாறநாயனுர் செய்த யாகத்திற்கு இறைவன் எழுந்தருளிவந்து அருள்வழங்கிய பெருஞ்சிறப்புடையது. சோழநாட்டுக் காவிரித்தென்கரைத் தலங் களில் ஐம்பத்தைந்தாவதுதலம். ஞானசம்பந்தர் பாடியருளிய மூன்று திருப்பதிகங்களைப்பெற்றுள்ளது. மதங்க முனிவர் வழிபட்டு உமை யம்மையைத் தன் மகளாகப்பெற்ற புராணச்சிறப்புடையது. நாககன் னிகை வழிபட்டு அருள்பெற்றதாலும், காளி வழிபட்டதாலும் மாகாளம் என இத்தலம் பெயர்பெற்றது.

**கோயிலமைப்பு :-** அரிசிலாற்றின் வடகரையில் பேருந்துச்சாலை யின் தென்பால் கிழக்குநோக்கி விளங்குகிறது ஆலயம். கோயிலுக்கு எதிரே மாகாளதீர்த்தம் உள்ளது. ஐந்துநிலைக்கோபுரத்தோடு அழகிய பெரிய திருக்கோயிலாகத் திகழ்கிறது. சுவாமிகோயிலை அடுத்துத் தென்பால் அம்பிகைகோயிலும் கிழக்குநோக்கித் திகழ்கிறது. இரண்டு பிராகாரங்கள் உள்ளன.

முதற்கோபுரவாயிலைக்கடந்து வெளிப்பிராகாரத்தை அடைந்தால் திருமுற்றவெளியில் வசந்த மண்டபம் உள்ளது. நந்தி பலிபீடங்களை

வழிபட்டு, துவாரவிநாயகரைத்தரிசித்து, இரண்டாம் திருக்கோபுர வாயிலைக்கடந்து உள்ளே செல்வோம். முதலில் அழகிய மகாமண்டபம் உள்ளது. அடுத்து ஸ்நபனமண்டபம், அர்த்தமண்டபம் முதலியன உள்ளன. முதலில் நாம் நாடிவந்த மகாகாளநாதரை வழிபடலாம். மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது என்பதற்கேற்பச் சின்னஞ்சிறிய சிவலிங்கத் திருவுருவில் மகாகாளநாதர் விளங்குகின்றார். அவரை வழிபட்டு அடுத்து திருவுலாப்போதரும் தியாகேசர் நடராசர் சந்திர சேகரர் முருகன் சோமாசிமாறர் முதலிய மூர்த்திகளையும் காட்சி கொடுத்தநாயகர் சோமாஸ்கந்தர் மற்றும் உற்சவ மூர்த்திகளையும் வழிபடலாம்.

முதற்பிராகாரத்தில் அறுபத்துமூவர் விநாயகர் முருகன் தட்சிணா மூர்த்தி உதங்கமதங்க முனிவர்கள் தனுசுசுப்ரமணியர் மகாலட்சுமி துர்க்கை சண்டேசுவரர் ஆகியோர் சந்நிதிகள் உள்ளன.

சுவாமிகோயிலின்தென்பால் தனிக்கோயிலாக அம்பிகைகோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. அன்பர்களின் அச்சத்தைப் போக்கும் அம்மையிவர். பயக்ஷயாம்பிகை என்பது அம்மையின் திருப்பெயர்.

**மூர்த்திகள்** : இறைவன் திருப்பெயர் அருள்மிகு மகாகாளநாதர். காளகண்டேசுரர் எனவும் வழங்கப்பெறுகிறார். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு பயக்ஷயாம்பிகை. அச்சந்தவிர்த்தநாயகி எனவும் பெயர். இத்தலத்திலுள்ள தியாகேசர், அச்சம்தவிர்த்த விநாயகர், முருகன், காட்சிகொடுத்தநாதர், காளி, நாகக்கன்னிகைதிருவுருவங்கள் தரிசிக்கத் தக்கவை. தீர்த்தம் மாகாள தீர்த்தம் அரிசில்ஆறு முதலியன.

**சோமாசிமாற நாயனார்** : "அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்" எனத் திருத்தொண்டத்தொகையில் கூறப்பெற்ற இந் நாயனார் திருவம்பர் என்னும் தலத்தில் அந்தணர்குலத்தில் தோன்றி யவர். மாறர் என்பது இவர்தம் திருப்பெயர். சிவபக்தியுடையவராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் திருத்தொண்டுபுரிந் தவர். இந்நாயனார் தம் துணைவியார் சுசீலாதேவியாரோடு குலநலத் திற்கு ஏற்ப நித்தியாக்கினி வழிபாடுசெய்து இல்லறமியற்றிவந்தார்.

மாறனார்க்குச் சோமயாகம் செய்யும் விருப்பம் உண்டாயிற்று. இறைவனுக்கு அக்னிமூலமாக அவிர்ப்பாகம் அளித்து வழிபடும் சோமயாகத்தைச்செய்ய எண்ணிய இவர், சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டுத் தியாகேசன் திருவருளைத் துணைக்கொண்டு அம்பருக்கும் திருமாகாளத்துக்கும் இடையில் வேள்விச்சாலை அமைத்து, சோம யாகம் செய்தார். வைகாசி ஆயில்ய நன்னாள் வந்தது. பூர்ணாகுதி

செய்து அவிவழங்கவேண்டியநேரத்தில் தியாகேசப்பெருமான் நீசத் திருக்கோலத்தில் கையில் மரித்த கன்றைத் தாங்கிப் பறைமுழக்கிக் கொண்டு நான்கு வேதங்களும் நாய்களாய் உடன்வர வேள்விச் சாலைக்கு எழுந்தருளினர். அம்பிகை மதுக்குடம் தாங்கிவந்தார். கணபதியும் முருகனும் சின்னஞ்சிறுவர்களாய் அம்மையின் கரத்தைப் பற்றி அருகில்வந்தனர். அந்தணர்கள், தீண்டத்தகாதவர் வந்தார் என்று அஞ்சியோடினர். "ஈசனுக்கு அன்பர் என்போர் எக்குலத்தவ ராயினும் அவர்கள் நம்மை ஆளாக உடையவர்" என்ற உள்ள முடைய மாறர், வந்தவர் தியாகேசரே என்பதை விநாயகரால் உணர்ந்து அவரை வரவேற்று அவியுணவளித்தார். பெருமான் சோமாசிமாறர்க்கு அருட்காட்சி வழங்கினர் அஞ்சியோடிய அந்தணர்களும் தம் பிழை பொறுக்க வேண்டினர். இறைவன் அனைவர்க்கும் காட்சியளித்து அருள் வழங்கினர். மாறர் சிறந்த சோமயாகத்தைச்செய்த சிறப்பினல் சோமாசிமாறர் எனப்பெற்ருர். சுந்தரருக்கு நண்பராய் அவரைப் போற்றி வழிபட்ட சிறப்பினல் சிவலோகம் எய்தினர்.

**காளி பூசித்தது :** அம்பாசுரன், அம்பன் ஆகியோரைக்கொன்ற கொலைப்பழியாகிய பிரமகத்தி நீங்கக் காளிதேவி இத்தலத்தில் அரிசிலாற்றில் நீராடி மகாகாளரை வழிபட்டு பழிநீங்கப்பெற்ருள். இவ்வரலாறு அம்பர் அம்பர்மாகாளம் இருதலத்திற்கும் கூறப்படு கின்றது, காளிதேவிகோயில் இத்தலத்திலேயே இருப்பதாலும் மாகாளம் எனத் தலப்பெயர் வழங்குவதாலும் இத்தலத்திற்கே இவ் வரலாறு சிறப்பாக உரியது எனினும், இருவரைக்கொன்றபழி தீரக் காளி இருதலங்களிலும் வழிபட்டாள் என்றும் கொள்ளலாம். ஏனைய புராண வரலாறுகளும் இருதலங்களுக்கும் பொதுவாயுள்ளன.

இத்தலத்திலுள்ள மோகினி அம்பாள் கோயில் மிக்க சிறப்புடை யது. மிக்கதூய்மையோடு அருச்சகர்கள் பூசிக்கின்றனர். அம்மையின் திருமேனியைத் தீண்டாமல் கோலால் ஆடை, மாலை சாத்தி வழிபடு கின்றனர்.

**திருப்பதிகங்கள் :** இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அப்ப ரோடு உடன் எழுந்தருளி அருளிச்செய்த மூன்று திருப்பதிகங்கள் உள்ளன. மற்றும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் 6-7-4, சுந்தரர் தேவாரத்தில் 7-39-5, 7-47-5 ஆகிய திருப்பாடல்களில் இத்தலம் குறிக்கப்பெற்றுள்ளது.

**கல்வெட்டு :** "பூமாது புணரப் புவிமாது வளர" என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியை உடைய முதற் குலோத்துங்கசோழ

தேவரின் மூன்றும் ஆண்டின் கல்வெட்டு, இவ்வூரை உய்யக்கொண்டார் வளநாட்டு, அம்பர்நாட்டு அம்பர் என்றும் திருக்கோயிலை அம்பரில் உடையார் திருமாகாளம் உடையார்கோயில் என்றும் குறிப்பிடுகின்றது.

விக்கிரமசோழன் காலத்தில், இத்திருக்கோயிலில் ஆளுடைய நாயகரையும் அம்மையாரையும் எழுந்தருளுவித்தவன், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுச் சிறுவேளூரான் அமுதன் திருச்சிற்றம்பல முடையான் உதயமார்த்தாண்ட மூவேந்தவேளான் ஆவான். இக் கோயிலில் இருக்கும் திருச்சுற்றுமாளிகை விக்கிரமசோழனால் கட்டப் பட்டதாகும். இச்செய்தி "ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமாளிகை விக்கிரம சோழன்" என்னும் கல்வெட்டால் அறியலாகும். இறைவர் திரு மாகாளம் உடையார். திருமாகாளத்துமகாதேவர் என்னும் பெயர் களால் வழங்கப்படுகின்றார். இத்திருக்கோயிலுக்கு, புரவுவரிவளாகம் வேதத்தூர், எயினிகுடி என்னும் ஊர்கள் தேவதானமாக வழங்கப் பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் உமாமகேசுவரிக்குத் தனிக் கோயிலை எடுப்பித்தவன் விக்கிரமசோழ மன்னனாவன்.

---

# அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி,
வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

திருமுருகன் பூண்டியில் முயங்குபூண் முலையம்மை
திருநணு வேதாம்பிகை
திருக்கொடி மாடச்செங் குன்றூரில் என்றும்நாம்
சிந்தைகொள் பாகம்பிரியாள்
உருகுமடி யவர்பணியும் திருவெஞ்ச மாக்கூடல்
உறைவிகிர்த நாயகி
ஓங்குபாண் டிக்கொடு முடிபண் மொழியம்மை
ஓதுதற் கரியகருவூர்
வருகிருபா நாயகி நெல்வாயி லரத்துறை
வளரானந்த நாயகி
வையத் தவர்தொழும் பெண்ணு கடம்மேவி
வாழ்கடந் தைநாயகி
பருவத குமாரிபர மேஸ்வரி பராபரி
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின் மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென் றும்
பணிவேற் கருள் அன்னையே.

கட்டுரை எண். 4.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit, D. P. P. A., D. U. N. I. U.,

துணையும், தொழுந்தெய்வமும், பெற்றதாயும், சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையும் மென்பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரிஆவது அறிந்தனமே

### அ. துணையும் தொழும்தெய்வமும், பெற்றதாயும்

(1) நமக்கு ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு துணை தேவைப் படுகிறது அவர்கள் யாரும் நம்மைக் கடைசிவரை தொடர்வதில்லை. கைவிடாதவர்களாகவும் நிச்சயம் துணைபுரிபவர்களாகவும் நம்புதற் கில்லை. நம்புதற்குரியவர்கள் ஆயினும் சமய சந்தர்ப்பங்கள் அவர் களின் உதவிகளை அடையமுடியாமல் செய்துவிடும். ஒவ்வொரு நிலையிலும் நமக்குத் துணையின் பயன் கிட்ட வேண்டுமாயின் அவள் அருள் கூடவேண்டும். அதாவது, நமக்கு உண்மையில் துணை வருவது அவளே தான்.

(2) கன்னியாகுமரியம்மன், தன்னைக் காணவந்து இரவில் வழி தவறிவிட்ட ஒரு கிழவிக்கு, கையில் விளக்குடன் சென்று வழிகாட்டி, துணையாக சென்று உதவியது போன்ற அன்னையின் திருவிளை யாடல்கள் அநேகம் உண்டு.

(3) கம்பர், ஒட்டக்கூத்தர் போன்ற அருட்கவிகளுக்கு அன்னை துணையாக நின்றிருக்கிருள். அவ்விருவரும் முறையே, தங்கள் இலக்கியங்களான இராமாயணம், தக்கயாகப்பரணி ஆகிய நூல்களை இரவில் தனியாக அமர்ந்து எழுதியபொழுது அன்னை துணையாய் நின்று அவர்களுக்குத் 'தீப்பந்தம்' பிடித்து உதவியிருக்கிருள் எந்தச் செயலையும் சரிவர செய்யத் தெரியாதவர்களை "நீ தீவட்டி பிடிக்கத் தான் லாயக்கு" என்று ஏசுகிறோம். அந்தச் செயலையும் தன்னடி யாருக்காக அவள் செய்திருக்கிருள் என்ருல் அவளது எளிவந்த அருட்டன்மையினை நம்மால் எங்ஙனம் உரைக்க முடியும்?

(4) "க்ஷேமங்கரி" என்ற பெயருடன் அம்பிகை நமக்கு வழித்துணை வருவதாக சக்திகவசம் கூறுகிறது.

(5) அனாதைக்குத் தெய்வமே 'துணையென்பது பழமொழி. உண்மையில் அனாதைகளே பெருங் 'குடும்பிகள்'. ஏனெனில் எண்ணிலடங்காப் பரிவாரங்களுடன் அவர்களுக்கு அன்னை துணை நிற்கிறாள்.

(6) இராமகிருஷ்ணபரமஹம்சர் போன்ற மகான்களைப் பொறுத்தவரை 'துணை' என்பதை 'வாழ்க்கைத்துணை' என்றும் பொருள் கொள்ளலாம். பரமஹம்சர் சாரதாதேவியினைப் பரதேவதையாகவே எண்ணினார் அன்றோ ?

(7) திருவொற்றியூர் எல்லையில் கண்களை இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவெண்பாக்கத்து அம்பிகை மின்னல்கொடி போல்தோன்றி, திருவெண்பாக்கம் வரை துணையாக வழிகாட்டினாள். ஆகவே அவள் மின்னலொளியம்மை என்றே அழைக்கப்படுகிறாள்.

(8) "பரமசிவனாருக்கே சக்தியின் துணியின்றி எச்செய்கையும் புரியவியலாது" என்று சௌந்தரியலஹரியின் முதல் ஸ்லோகமே குறிப்பிடுகிறது. "பஞ்சக்ருத்யங்கள்" என்னும் ஐந்தொழில் புரிய அரனுக்கே அவள் துணை நிற்கிறாள்

(9) தொழுந்தெய்வம் என்று அனைவருக்கும் ஒரு தெய்வம் இருக்கவேண்டியது அவசியம். தெய்வத்தை வணங்காததலையும், கற்ற கல்வியும் பயனற்றவையே என்பது குறட்கருத்து முழுநம்பிக்கையுடன் பற்றிக்கொண்டு தொழும்தெய்வம் திரிபுரசுந்தரியாகிய அம்பிகைதான் என்று பட்டர் விளக்குகிறார். அவ்வூரார் நினைத்தபடி வேறு தெய்வங்களைப் போற்றித் தொழவில்லையென்பதும் தெளிவு

(10) தன்னை மகன் வெறுத்தாலும் தாய் மகனை வெறுப்பதில்லை. ஆதிசங்கரர் போன்ற துறவிகளும் தாய்மையினைப் போற்றியிருக்கின்றனர். அள்ள அள்ளக் குறையாது தாயின்கருணை "மாதிருகாதகன்" என்னும் தாய்க்கே துன்பம்தரும் மகனும் தாயினை அடித்துத் துன்புறுத்தும் மகனும் அக்கை நொந்தபொழுது அம்மா என்றே அழைக்கிறான்" என்று வைணவ வியாக்யாதாவாகிய பெரியவாச்சான் பிள்ளையும் விளக்குகிறார். எவ்வளவு பிழை செய்தாலும் அன்பையே காட்டும் 'பெற்றதாய்' என்று அம்பிகையினைக் குறிப்பிட்டார்.

(11) 'ஆப்ரம்ஹகீட ஜனனி' என்கிறது லலிதா சகஸ்ரநாமம். 'கீடம்' என்பது மிகநுண்ணிய உயிர். பிரும்மா முதல் மிகநுண்ணிய உயிர்வரை பெற்றவள் ஆதலால் 'பெற்றதாய்' என்றார்.

(12) "மாதாச பார்வதிதேவி. பிதா தேவோ மகேஸ்வர:" என்ற அன்னபூர்ணாஷ்டகப்படி ஞானிகள் அம்பிகையினையே உண்மையான தாயாக எண்ணுகின்றனர்.

(13) நிலம், ஆறு, பசு, நாடு அனைத்தையும் பெற்ற தாயாகக் கூறுவது நம் பெரியோர்களின் தனிப்பண்பாகும். ஐம்பூதங்களிலும் வியாபித்திருக்கும் அன்னையினையும் அவ்வாறு அழைக்காமல் விடுவார்களா?

(14) பாண்டிச்சேரியில் தங்கியிருந்து ஆன்மீகம் பெருக்கிய பிரஞ்சு நாட்டுப் பெருமாட்டியின் பக்தர்கள் தாயினை மூன்று வகையாகக் கூறுவர்:- 1. Physical Mother அல்லது பெற்றதாய் 2. Spiritual Mother அல்லது ஞானத்தாய் என்னும் குரு. 3. Divine Mother அல்லது தெய்விகத்தாயாகிய அம்பிகை.

(15) கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும் "பெற்றதாயினைப்" போற்றுகின்றனர்.

இவ்வாறு எல்லாவகையிலும் பெற்றதாயின் சிறப்பு யாவராலும் போற்றப்படுவதால் அபிராமிபட்டரும் அம்பிகையைப் "பெற்றதாய்" என்றார்.

### ஆ. சுருதிகளின் பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும்

(1) சுருதி என்றது வேதங்களை என்பர். அவை கடவுளின் மேன்மையனைத்தையும் எடுத்துக்காட்டும் தெய்வீக நூல்களாகும். அவற்றின் உள்ளீடும் மொத்த உருவமும் அம்பிகைதான்.

(2) அவ்வேதங்களின் ஆதி, மத்ய, அந்தம் அனைத்தும் அம்பிகைதான்.

(3) வேதத்தின்வேர் 'பிரணவம்'. நடுப்பாகம் வேதசாகைகள். கொழுந்து உபநிடதங்கள். பிரணவம், வேதசாகைகள், உபநிடதங்கள் யாவும் அம்பிகைதான்.

(4) எவ்வளவு எதிர்ப்புப்பிரசாரங்கள் செய்தும் வேதங்களின் உயர்வை அழிக்க முடியவில்லை. அவ்வாறு வேரூன்றிவிட்டது. எனவே "பதிகொண்ட வேரும்" என்றார்.

(5) தன் கிளையினை வெட்டுபவருக்கும், கொழுந்தைக் கிள்ளுபவருக்கும் மரம் நிழல் கொடுக்கிறது. அதுபோல் வேதம் தன்னை நிந்திப்பவரையும் காக்கிறது.

(6) வேதம் என்ற மரம் தர்மம் என்ற நிழலைக் கொடுத்து, உயிர்களைக் காக்கிறது. ஆகவே அதனை மரமாக உருவகித்தார். அம்பிகையின் ஸ்வரூபமே அவ்வேதவிருக்ஷம்.

### இ. திரிபுரசுந்தரி ஆவது அறிந்தனமே

(1) துணையாகவும், தொழும் தெய்வமாகவும், வேதத்தின் உருவாகவும் உள்ளவள் திரிபுரசுந்தரிதான் என அறிந்தேன்" என்பது திரண்ட பொருள்.

(2) திரிபுராந்தகனின் மனைவியானவள், மூன்று மூன்றுகவுள்ள "த்ரயங்கள்" அனைத்தினுக்கும் உரிய வளாதலின் "திரிபுரசுந்தரி" எனப்பட்டாள். இதன் விளக்கம் "பொருந்திய முப்புரை" என்ற பாடலின் ஆராய்ச்சியுரையில் காண்போம்.

(3) மூவுலகிலும் இணையில்லா அழகுடையவளாதலின் திரிபுர சுந்தரியானுள்.

(4) திரிபுரசுந்தரியின் திருவுருவம் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடனும், அவற்றில் நான்கு ஆயுதங்களுடனும் அமையும்.

(5) அச்வாரூடா, ஸம்பத்கரி, மந்திரிணி, தண்டினி ஆகிய நான்கு தேவதைகளும் அம்பிகையின் கரங்களாக அமைகின்றனர்.

"சதுர்பாஹு சமன்விதா" என்ற நாமாவில் தொடங்கி, பின்பும் நான்கு நாமாக்களில் லலிதா சகஸ்ரநாமம் இத்திருக்கோலத்தை வருணிக்கிறது.

### ஈ பனிமலர்ப் பூங்கணை

(1) அம்பிகை குளிர்ச்சிபொருந்திய ஐந்து புஷ்ப பாணங்களை வலது முன்கையில் வைத்திருக்கிறுள். இதனை லலிதா சகஸ்ரநாமம் "பஞ்சதன்மாத்ரஸாயகா" என்கிறது.

(2) ஸப்த, ஸ்பரிஸ, ரூப, ரஸ, கந்த தன்மாத்திரைகளை, அதாவது சுவை, ஒளி, ஊறு, ஒலி, மணம் ஆகிய ஐந்தினையும் ஐங்கணை களாகத் தாங்கியிருக்கிறுள். அதாவது அவளாலேயே ஒலி முதலிய யாவும் உருவாகின்றன.

(3) இக்கையில் இருக்கும் தேவதை தண்டாநதா அல்லது தண்டினி எனப்படுகிறுள்.

(4) அம்பிகை தன்னடியார்களை மகிழ்விக்க ஒலி முதலியவற் றைக் கொடுத்து உதவுகிறுள். மற்றும் தவறு செய்பவரைக் கடுமை

யாகத் தண்டிக்காமல் மலர்க்கணையால் அடிப்பதுபோல் மெல்லத் திருத்துகிருள். அதனுலேயே "பனிமலர்ப் பூங்கணை" என்ருர்.

உ. கருப்புச் சிலேயும்

(1) சிலேயென்ருல் வில். அம்பிகை கரும்பு வில்லே இடது முன்கையில் வைத்திருக்கிருள்.

(2) லலிதாஸகஸ்ரநாமம் இதனை "மனோரூபேக்ஷுகோதண்டா" என்று வருணிக்கிறது. மனமாகிய கரும்புவில்லேயுடையவள் என்கிறது. இக்கை மந்திரிணி தேவதையின் ஸ்வரூபம்.

(3) கரும்பு வில்லே, 'கருப்புச்சிலே' என்று வலித்தல் விகாரமாய்க் கூறியிருக்கிருர். அதாவது 'ம்' என்ற மெல்லினத்துக்குப் பதில் 'ப்' என்ற வல்லினம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்திரியங்களை அடக்கியாளும் விஷயத்தில் தேவி உபாஸகனின் மனம் நல்ல வலிமைபெற்றுவிடுகிறது. இதனை ஒரு எழுத்தை வலித்துக் காட்டுவதன்மூலமே அபிராமிபட்டர் விளக்கிவிடுகிருர்.

(4) கரும்பில் இனிப்பும் உவர்ப்பும் கலந்திருக்கின்றன. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன என்பதை இது காட்டுகிறது. மற்றும் கரும்பின் நுனிப்பகுதி உவர்ப்பாய் இருக்கிறது. அடியில் செல்லச்செல்ல இனிப்பாய் இருக்கின்றது. அவ்வாறே அம்பிகையின் தத்துவங்களை அறிய அறிய சுவைகிட்டுகிறது.

(5) கரும்பு இயற்கையாகவே இனிப்பாக இருக்கிறது. அப்படியே அம்பிகையும் இயல்பாகவே இனிமையானவள். "ஸ்வபாவமதுரா" என்ற நாமா இதனை எடுத்தியம்புகிறது.

(6) "கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்" என்ருர் திருவள்ளுவர். கீழ்மக்களையும் அம்பிகையின் அருள் பயனுள்ளவர்களாக ஆக்கிவிடும் ஆற்றலுடையது

ஊ. கரும்புவில்லும் புஷ்பபாணமும் எப்படி வந்தன?

கரும்புவில்லும் புஷ்பபாணமும் மன்மதனுக்குரியவை. இவை அம்பிகைக்கும் இருக்கின்றன. இதன் காரணம் என்ன? தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிப் புரமெரித்த பரமனைத் தன் காமக் கணைக்கு இலக்காக்க மன்மதன் திருக்கயிலாயம் சென்ருன். தனது முடிவு உறுதியென்பது அவனுக்குத் தெரிந்தது. எனினும் துணிந்து தனது மலர்க்கணையினைக் கரும்புவில்லில் பூட்டி விட்டான். தேவி உபாஸகர்களில் முக்கியமான ஒருவனுகிய மன்மதன் அம்புகளைத்

தொடுக்குமுன் தேவியை நினைந்தான், "இராஜராஜேஸ்வரியாகிய உன்னை நான் இன்றுவரை என்னால் இயன்றளவிற்குப் பூஜித்திருக்கிறேன். இதோ, இன்னும் சிறிதுநேரத்தில் பரமனின் நெற்றிக் கண்ணால் எனது சரீரம் சாம்பராகப்போகிறது; இருந்தாலும் உன்னைப் பூஜித்த எனக்கு 'அழிவு' என்பது ஏது? இதோ உன்னிடமே ஐக்கியமாக உனது ஸ்ரீபுரத்தைநோக்கி வந்துகொண்டிருக்கின்றேன். ஆஹா! ஹா! உனது சந்நிதானத்துக்குவரும் என்னிடம் - போருக்குப் புறப்பட்ட என்னிடம் உனக்குக் காணிக்கையாகக்கொண்டு வந்து கொடுக்கக்கூடிய எதுவும் இல்லையே; தாயே! உன் அருளால் உலகனைத்தையும் மயக்கிய எனது கரும்புவில்லும் புஷ்பபாணமும் தான் இருக்கின்றன. இதோ! உன் மலரடிக்குப் புறப்பட்டுவிட்டேன். இந்தக் கரும்பு வில்லையும் புஷ்பபாணத்தையும் எனது காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன். கருணையுடன் ஏற்று அருள்வாய்" என்று அம்பிகையினை வேண்டியபடி பரமன்மீது அம்பெய்து விட்டான் மதனன்.

தன் பக்தனின் கோரிக்கையினை நிறைவேற்ற எப்போதும் தயாராகவுள்ள அம்பிகை அவ்வாறே கரும்புவில்லையும் மலர்க்கணைகளையும் தானே எடுத்துவைத்துக்கொண்டாள். பின்னர் தன் (பார்வதி) திருமணசமயத்தில் உயிரளித்து அனங்கனாகவாழ அவனுக்கும் அருள்செய்துவிட்டாள். மன்மதன் உயிர்களுக்குக் காமத்தைக் கொடுப்பவன். ஆனால் அம்பிகையின் கரத்திலிருக்கும் கரும்பும் கணைகளும் தியானிப்பவருக்குக் காமசமனமும், 'இந்திரிய நிக்ரஹம்' என்னும் புலனடக்கமும் கொடுக்கின்றன.

இப்பாடலினைப் பாராயணம் செய்வதன்மூலம் புலனடக்கம் எளிதில்கிட்டும். மற்றும் தெய்வத்துணை எஞ்ஞான்றும் உடனிருக்கும்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### திருக்குறுக்கை ஸ்ரீ யோகீசுவரசுவாமி தேவஸ்தானம்

இன்று திருக்குறுக்கை அருள்மிகு யோகீசுவரரையும் அருள்மிகு ஞானம்பிகையையும் என்சகோதரர் குடும்பத்துடன் தரிசனம்செய்யும் பாக்கியம் பெற்றேன். காமதகனமூர்த்தியைத் தரிசித்து அருள்பெற்றோம். கோயில் நல்ல முறையில் நடைபெற்றுவருகிறது. ஆலய நிர்வாகிகளின் திறமையைக்கண்டு உளம் மகிழ்ந்தேன். சிறிதுநேரம் ஆண்டவனைத் தரிசித்து மனநிம்மதியுடன் செல்கின்றோம்.

(S-d) இராமமூர்த்தி,

16—3—80. டிபுடி கலெக்டர் (நி. சீ.) மாயூரம்.

## கடிதப் பாடல்கள் :

செந்தமிழ்ச்செல்வர்,

### திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,

சிவசமயம் நனிவளரச் சிவராச தானியாத்
திகழ்தரும புரந்தன்னிலே
சீலமிக் கவர்போற்ற ஞாலமுழு தும்புகழச்
செந்நெறி வளர்த்து, நல்ல
நவமலிசு வைத்தமிழ்ப் புலவரை யன்பொடும்
நயந்துபரி சுணர்ந்துபேணி
நாள்நாளும் அன்னவர் போற்றியே புகழ்பாட
நல்லபல உதவிசெய்து,
பவமலி பிறப்பறுத் துய்யவந் திடுசீடர்
பரிபக்கு வந்தெரிந்து
பாங்கொடும் உபதேசம் செய்துரிய நிலைநல்கிப்
பாலித்துத் தன்மங்களை
உவரிசூ ழுலகினர் உய்யவே புரிகின்ற
உத்தமக் குணமேருவே
ஓதுசண் முகதேசி கப்பெயர் விளங்கவரும்
உயர்குரவ இதுகாண்கவே. (1)

நின்திரு முனர்ப்பணிந் திம்முடங் கல்வரைய
நினைத்தனன் ; தமிழருமையை
நீஅறிந் ததுபோல ஆர் அறிந் துள்ளவர் ?
நிலவுபல நூலுணர்ந்தாய் ;
பொன்திக ழிலக்கிய இலக்கணப் பயிற்சியிற்
புலமைநனி படைத்துள்ளனை ;
பொற்புடைய அற்புதச் சித்தாந்த நூல்களைப்
புரையறத் தெளிந்துணர்ந்தாய் ;
நன்றுடைய குருமரபு நனிவளர் தரப்பணிகள்
நாடொறும் ஆற்றுகின்றாய்
நாதாந்த வேதாந்த யோகாந்த சித்தாந்த
நன்னெறிகள் நன்குணர்ந்தாய் ;
மன்னுநின் பெருமையை நஞ்சுகக் கிடுசேடன்
நவிலுவ னெனச்சொல்வதோ ?
நாடறியும் வீடறியும் நாவலர்தம் நெஞ்சறியும்
நாதநின் பெருமைமுற்றும். (2)

இத்தகைய பெருமைகொள் நின் திருச் சந்நிதியில்
ஏழையேன் விஞ்ஞாபனம்
இதுவென உரைப்பதற் கெண்ணினேன் ; இரந்திடுக
இரத்தக்கார்க் காணினென் று
வித்தகக் குறளினில் வள்ளுவர் மொழிந்த அவ்
விரகினை உளங்கொண்டனன் ;
விழைவெனக் கீதென்று நின்னிடம் செப்பினல்
வீணனென் றுதறமாட்டாய் ;
சித்தமிசை யருள்கொண்டு சிறியனேன் வேட்கையைத்
தீர்ப்பதற் குளங்கொள் ளுவாய் ;
செந்தமிழ் நூல்பலவும் நன்குணர்ந் திடுதகைமை
சேர்ந்தநின் திருவுளத்தில்
எத்தனென் றெண்ணுமல் யான்சொல்வ தேற்றுநனி
என்குறை முடித்தருளுவாய் ;
எண்முகத் திசையிலும் பண்முகந் தேத்தல்செய்
சண்முகத் திருப்பெயரினேய். (3)

இந்தநாள் நல்லநூல் படிப்பவர் குறைந்துளார் ;
இலக்கண இலக்கியங்கள்
இவையென்ன வேயறிந் தோதுவார் அருகினர் ;
என்னினும் என்குரவனுர்
தந்தசெந் தமிழறிவு கொண்டுபன் னூல்களைச்
சதிர்பட வரைந்துள்ளனன் ;
தமிழ்தமிழ் என்றுமிக ஆரவா ரஞ்செய்யும்
தகையன்றி உண்மையாகச்
செந்தமிழ் நூல்களைக் கற்பவர் மிக அரியர் ;
சிறியனேன் எழுதும்நூல்கள்
திகழ்மணம் புரிபவன் இன்றியே வாட்டத்தைச்
சேர்கன்னி போல்இருந்த ;
இந்தவறு நிலையினை மாற்றுதற் கொருவழியும்
எளியனேன் காணவில்லை ;
என்ருலும் ஒருசிறிய முயற்சியைச் செய்வதற்(கு)
எண்ணினேன் ; அதுசொல்லுவேன், (4)

என்னுடை நூல்களை அருமையறி கின்றவர்
யாவரென் றேதெரிந்தே
இவை கொண்மின் என அவர்க் கனுப்பியே ஆதரவை
ஈந்திடுமின் எனஎழுதினேன் ;
அன்னதாம் முறையினில் நின்சந்நி திக்கவை
அனுப்பிடச் செய்துள்ளனன் ;
அடாச்செயல் ஈதென் றுளங்கொள்ளல் இன்றியே
அவற்றையேற் றுதரிப்பாய் ;

இன்னபே ருதவிவே ரினிற்புனலை ஊற்றிடுதல்
என்னவே நன்மைசெய்யும் ;
ஏன் இவன் இவ்வாறு வலியவந் தேதொல்லை
ஈந்தனன் என்றெண்ணமல்
நின்னுடைப் பெருந்தகைமை யாலென்றன் பிழையினை
நினையாமல் ஆதரிப்பாய் ;
நிமலனடி மறவாத அமலமுறு சிவஞானம்
நிமிர்தருமை வளர்தலைவனே. (5)

யானெழுதி யுள்ள நூற் றெருகுதியினை உய்த்தனன் ;
ஈடிலாக் கருணையுடைய
ஏந்தலென நினை எண்ணித் துணிவுடன் இதுசெய்த
என்குற்ற மேபொறுக்க.
தேனெழுக வேபேசிச் செவியாரக் கேட்டுப்பின்
திலமேனும் உதவிசெய்யாத்
தீம் 'பா' கன் தம்பால் நெருங்குதற் குளமிலேன் ;
தேனுவும் தருவுமெனவே
ஆனஇயல் புடையநின் திருவுளச் சிறப்பினை
அறிந்துனக் கீதோதினேன்
அஞ்செழுத் தார்மனுவை நெஞ்சமுழுத் தித்தவம்
ஆற்றுதலை ஏற்றமுனிவா
வானவரும் காணரிய மாதேவ னைத்தினம்
மந்திரப் பூசைசெய்து
வாயார வாழ்த்தித் துதித்தின்பம் கொண்டதவ
மாமுனிவ ளுமண்ணலே. (6)

புத்தக மனுப்பிய திறத்தினை யுளத்தினிற்
பொறுத்தருளி நின்கருணையால்
பொற்பொடு மிவற்றையுள மொத்தஉவ கைத்திறம்
பொருந்தஇனி தேற்றருள்க ;
எத்தகைய உதவிசெய் தாலும்அதை ஏற்கின்ற
இயல்பினேன் ; நின்பெருமையை
எண்ணியத னால்இவை நின்னுளத் துவகையை
ஈந்திடு மெனநினைந்தேன்
சத்துருசங் காரவடி வேல்முருகன் திருவடியைச்
சதாபோற்று மிவ்வெளியனேன்
சாந்தகுண மேந்துமுள மார்ந்தநினை வாழ்த்தியே
தமிழுக்கு நலம் செய்யென
நத்தியது செப்பினேன் ; நயப்புடன் வியப்புரு
நல்குவை எனநம்பினேன்
நமசிவய மனுமுறையில் தினமுமுரை தனிலுறையும்
நற்றவச் சிங்கவேறே ! (7)

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 27—3—1980 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் திருக்கோட்டாறு ஸ்ரீஐராவதேசுவரர் ஆலயத்திலும், மாலை 5 மணியளவில் திரு அம்பர்ப்பெருந்திருக்கோயில் ஸ்ரீ பிரமபுரீசுவரர் ஆலயத்திலும், இரவு 7 மணியளவில் திரு அம்பர்மாகாளம் ஸ்ரீ மாகாளநாதர் ஆலயத்திலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத்திருக்கோயில்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தலத்திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகங்கள் வழிபாட்டின்போது அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. வித்துவான். திரு வி சா. குருசாமி தேசிகர் எம். ஏ., புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., புலவர். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ ஆகியோர் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் வந்திருந்து சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## வசந்த நவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு வசந்த நவராத்திரி விழா 17—3—1980 திங்கட்கிழமையன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு உலக நலன் கருதி விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவசக்தி அர்ச்சனைமூலம் லட்சார்ச்சனையும், சப்தசதி மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 25—3—1980 செவ்வாய்க்கிழமை காலை நவமியன்று தசசண்டி வேள்வியும் இரவு லட்சார்ச்சனை பூர்த்தியும் நிகழ்வுற்றன. தேவியின் சந்நிதியில் சப்தசதி, அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடைபெற்றன இந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதங்கள் வழங்கி ஆசியருளினர்கள். பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## பங்குனித்திங்கட் பெருவிழா

**வேளூரில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 21—3—1980 வெள்ளிக்கிழமையன்று தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. 21—3—80 வெள்ளிக்கிழமையன்று கொடியேற்றமும் 25—3—80 செவ்வாய்க்கிழமையன்று சகோபுரக் காட்சியும் 27, 28—3—80 ஆகிய இருநாட்களும் திருத்தேர்த் திருவிழாவும் 30—3—80 ஞாயிற்றுக்கிழமை தீர்த்தவிழாவும் சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப்பெற்றன. திருவிழா நாட்களில் மாலையில் சமய விரிவுரைகள் நடைபெற்றன. 21—3—80 வெள்ளிக்கிழமை அன்று தருமையாதீனத் தமிழ்ப்புலவர், செஞ்சொற்கொண்டல், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி., டிப். லிங்., அவர்கள் 'ஞானத்தமிழ்' என்ற தலைப்பிலும், 22—3—80 சனிக்கிழமையன்று தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் 'அப்பர் அருந்தமிழ்' என்ற தலைப்பிலும் விரிவுரை ஆற்றினுர்கள். 23—3—80 ஞாயிற்றுக்கிழமை திருமுறை விழாவும் - தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றது. பூம்புகார் பேரவைக் கல்லூரித் துணைப் பேராசிரியர் திரு. த. அகரமுதல்வன் எம். ஏ., அவர்கள் 'திருமுறைச் சிறப்பு' என்னும் பொருளில் விரிவுரை ஆற்றித் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசு வழங்கினுர்கள். பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் திருமுறைகள் யானைமேல் திருவீதி யுலாக் காட்சி நிகழ்வுற்றது. 24—3—1980 திங்கட்கிழமையன்று திருப்பனந்தாள் வித்துவான். திரு. மு. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் 'சுந்தரர் செந்தமிழ்' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினுர்கள். அன்பர்கள்பலர் வந்து சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

**திருபுவனத்தில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 21—3—1980 வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப் பெருவிழா சிறப்பாகநடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாணவிழா, திருத்தேர்விழா ஆகிய சிறப்புவிழாநாட்களில் பெருந்திரளானமக்கள் சுவாமிதரிசனம்செய்து பயனுற்றனர். விழாநாட்களில் மாலையில் சமயச் சொற்பொழிவுகள்

நிகழ்வுற்றன. 23—3—1980 ஞாயிற்றுக்கிழமை அன்று திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், பண்டித - வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள் 'அப்பூதியடிகள்' என்ற தலைப்பிலும், 24—3—80 திங்கட்கிழமை அன்று திருப்பனந்தாள்செந்தமிழ்க்கல்லூரிப்பேராசிரியர் வித்துவான் திரு. தா. ம வெள்ளைவாரணம் அவர்கள் 'சேரமான்பெருமாள்' என்பதுபற்றியும் விரிவுரையாற்றினர். 26—3—80 புதன்கிழமை அன்று திருமுறை விழாவும் - தேவார வகுப்பு ஆண்டு விழாவும் நடைபெற்றது. கும்பகோணம் திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் பி ஏ., எல். டி. அவர்கள் 'நால்வர் நற்றமிழ்' என்ற தலைப்பில் உரையாற்றித் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு யானைமேல் வைக்கப் பெற்றுத் திருமுறைப் பாராயணத்துடன் திருவீதியுலா நடைபெற்றது. 28—3—80 வெள்ளிக்கிழமையன்று புலவர். திரு. இரா. செல்வக் கணபதி எம். ஏ., அவர்கள் 'மங்கையர்க்கரசியார்' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார். 29—3—80 சனிக்கிழமையன்று மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரால் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. 6—4—80 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீசரப மூர்த்திக்கு ஏகதின லட்சார்ச்சனை நிகழ்ந்தது அன்று ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

**பேரளத்தில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உத்திரபாததீர்த்தத்திருநாள் 30—3—80 ஞாயிற்றுக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அக்கினி புஷ்கரிணி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருளலும், இரவு திருவீதி யுலாவும் நிகழ்வுற்றன. மாலை திருவாரூர், நகைச்சுவைமணி, திரு. கே. சாம்பசிவம் பி. ஏ., பி. டி., அவர்கள் "திருஞானசம்பந்தர்" என்ற பொருளில் விரிவுரையாற்றினார். அன்பர்கள் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவினைக்கேட்டும் பயனுற்றனர்.

## சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

## நாயன்மார்கள் குருபூஜைகள்

எறிபத்தநாயனார், காரிநாயனார், நேசநாயனார், கணநாதநாயனார், முனையடுவார்நாயனார் ஆகிய நாயன்மார்கள் குருபூஜைகள் முறையே 4—3—80, 11—3—80, 22—3—80, 24—3—80, 26—3—80

தேதிகளில் மாலை 6-30 மணிக்கு நிலையபூஜை மடத்தில் நடைபெற்றது. பேராசிரியர் திரு. அய்யாசாமி எம். ஏ. அவர்கள் பெரிய புராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினார்கள். நிலைய அன்பர்களும், ஸ்ரீ அப்பர் குருகுல மாணவர்களும் கேட்டுப் பயன்பெற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

இவ்விழா 22—3—80 சனிக்கிழமை மாலை 7-00 மணிக்கு நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு புலவர் திரு. என் இராமலிங்கமும் திரு. என். இராமமூர்த்தி அய்யர், குமாரி ஆர். கௌரி ஆகியோரும் வேளூர்ப்பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினார்கள்.

திரு. ஆர். சிவஞானம் செட்டியார் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்கள். தலைமை தாங்கிய நெல்லை திரு. ரா. சு. இராமலிங்கம் அவர்கள் பேசுகையில், உலகில் முருக வழிபாடு உள்ளத்தை ஒருமைப்படுத்தி ஆன்மீகத்தை வளர்க்கும் வழிபாடு; தமிழகத்தில் கண்கண்ட கடவுளாய் விளங்கும் முத்துக்குமாரக் கடவுள், தம்மை வந்தடையும் பக்தர்களுக்கு என்றும் அருள்பாலித்து வருகின்றார் என்று குறிப்பிட்டு, தென்னாட்டில் சிகரம் வைத்தாற் போல்விளங்கும் புள்ளிருக்குவேளூரில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானின் பெருமைகளை ஸ்ரீ குமரகுருபரர் பாடிய சில பாக்களை மேற்கோளாகக்காட்டி விளக்கிப்பேசினார்கள்,

பின்னர் புலவர் திரு ஏ நாராயணசுவாமி அய்யர் எல்லோருக்கும் நன்றி கூறிய பின், பிரசாதம் வழங்கப்பட்டது.

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

1980 மார்ச் மாத சமயப் பிரசாரவழிபாடு 30 — 3 — 80 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணி முதல் 8-30 மணிவரை சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை செய்யப்பட்டது. வழிபாட்டின்போது புலவர் திரு. என். இராமலிங்கமும், கோயில் ஓதுவார் திரு. எம் பாலசுப்பிரமணியனும் திருமுறைப்பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. புலவர் திரு. ஏ. நாராயணசுவாமி அய்யர் எல்லோருக்கும் வரவேற்புக்கூறி, கோயிலின் வரலாற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பேராசிரியர் திரு. அய்யாசாமி அவர்கள் பேசுகையில் இறைவனை எத்தனையோ உருவங்களில் காண்கிறோம். இருந்தாலும் அருவுருவமான சிவலிங்கவடிவில் கண்டு வழிபடுவதில் தனிச்சிறப்பிருக்கிறது. சிவபெருமான் பிறப்புக்குக்காரணமான காமனை எரித்தார். இறப்புக்குக் காரணமான காலனை உதைத்தார், ஆகவே சிவலிங்கவடிவில் விளங்கும் சிவபெருமானை வழிபட்டால் பிறப்பு இறப்பு இவைகளிலிருந்து விடுபடலாம். உலகத்தில் பல இடங்களில் சிவலிங்க வழிபாடு நிகழ்கிறது. ஆனாலும் நம்தென்னாட்டில் நடைபெறும் சிவலிங்கவழிபாடு தனிச்சிறப்புடையது அத்தகையவழிபாடுசென்னையில் தருமையாதீனத்தின் சார்பில் மாதந்தோறும் நடைபெற்றுவருகிறது. அதில் எல்லோரும் கலந்துகொண்டு பயனடையவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அடுத்து. புலவர் திரு. ஏ. ஜே. இராமசாமி முதலியார் அவர்கள் மக்கட்பிறவி பெற்றதன் பயன் இறைவழிபாடு செய்தலே என்ற கருத்தை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். புலவர் திரு. கே. சந்தானராமன் அவர்கள் நன்றிகூற வழிபாட்டுக்கூட்டம் இனிது நிறைவெய்தியது.


# ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின்முதல்வருமான ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஆயுட் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100—00 |
| ,, | (வெளிநாடு) | | 125—00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | | 7—50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | | 10—00 |
| ,, | (வெளிநாடு) | | 12—00 |

நிர்வாக ஆசிரியர்: "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612 504.

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரிஸு சித்திரைமீ 1உ முதல் 30உ முடிய.

( 13—4—80 முதல் 13—5—80 முடிய )

| | | | |
|---|---|---|---|
| பு சந் | சூ | சு | ல |
| கே | இராசி | | |
| | | | செ கு ரா சனி |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | சூ செ ரா | சு | கு |
| ல | அம்ஸம் | | |
| | | | சந் |
| | சனி | பு கே | |

கலியுகாப்தம் 5081 ஸ்ரீ ரௌத்திரி ஸு சித்திரை மீ 1உ பானுவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கௌலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 12 நாழிகை 30 விஞடிக்கு அதாவது கலியுக சுத்ததினம் 1855877 நாள் 12 நாழிகை 30 விஞடி இதை 7 ஆல்வகுத்து வந்த மீதியாகிய தினம் சுக்கிராதியாகப் பானுவாரம் மேற்கண்ட நாழிகை விஞடியளவில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் மீனராசியிலிருந்து மேஷராசி சங்கிரமணமாகச் சௌரமான ரௌத்திரி ஸு சித்திரைமாதப்பிரவேசம் செய்தருளுகிருர். அன்று விஷுபுண்ய காலமாகும். சங்கிரமணவாராதிபதி சூரியன் ரௌத்திரி வருஷத்துக்கு வானமண்டலத்தில் மந்திரியாக நியமனம் ஆகிருர். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனுவது லோக நாடுகளில் அரசர்கள் ஜனுதிபதிகள் ஈஸ்வர கட்டளையின்படி தர்மபரிபாலனம் செய்து பிரஜைகளின் க்ஷேமம் காத்துவருவர். தேசங்களில் உயர் பான்மையினராக உள்ள இலட்சுமிகடாட்சம் பொருந்தியுள்ள ஜனப் பிரதிநிதிகள் மந்திரிகளாகிய கனவான்கள் தம் பெருந்தன்மை போக்கில்

அறவழியில் நாட்டுக்கு நல்லன செய்து பிரஜைகளின் போற்றுதலை வெகுவாக அடைவர். நாடுகளில் எங்கும் ஜனங்களின் வாழ்க்கை அத்தியாவசியப் பொருள்களினுடைய விலைவாசி மலிந்துவரும். ஜனங்கள் உணவுப்பொருள் உடை ஆகியன இலகுவாகக் கிடைக்கப்பெற்று உய்வார்கள்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் ஈஸ்வரத் தன்மையில் அவதாரமாகி வந்து திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் லோகமாந்தர்களின் விவேக சிந்தைக்கு ஞான உரைகள் திருவாய் மலர்ந்தருளியும் சிவபக்திநெறி பண்பாட்டுக்கு ஊக்குவித்தும் அருளாசி செய்து, சிவசமயம் பரவுவதற்கான செயல் திட்டங்களை ஏற்படுத்தி இயங்கச் செய்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூஜைகள் சாஸ்திரோக்த நியமம் வழுவாது நடைபெறும். உற்சவங்கள் மூர்த்திகளின் புறப்பாடு விமரிசையாக நடைபெறும். மக்கள் இறைவனைத் தரிசித்து மனம் தெளிவுபட்டு ஜீவனோபாய நற்கிரியைகளில் உறுதிப்பாடாகச் செயல்புரிந்து நேர்மையில் உய்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் போஜனாதி சௌகரியங்கள் நல்லவிதமாக இருந்துவரும். சகோதரருக்கு அரசாங்கக் காரியங்களில் எதிர்ப்புடன் நல்லன ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூல காரியங்களில் 10உ முதல் பிரயோஜனம் மிகும். கட்டடம் இயந்திர வாகனம் வெளுமை வஸ்து இவற்றின் பிராப்தி விருத்திகரமாகும். ஓர் பிரயாணம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். சித்திரைமீ 19உ 23 நாழிகை 20 வினாடிமுதல் 21உ 44 நாழிகை 29 வினாடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

ரௌத்திரி ஆண்டுக்கு இராசி ஆதாயம் 5, விரயம் 11, ஆரோக்கியம் 5, அனாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 2, இராஜகோபம் 6, சுகம் 5, துக்கம் 1.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½**

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர்

பந்து மித்திரர்களில் ஓர் மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். வித்து வத்துவம் கலைத்துறைகளில் மதிப்பும் இராஜாங்க நன்மைகளும் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். சித்திரைமீ 21உ 44 நாழிகை 29 வினாடிமுதல் 23உ 59 நாழிகை 10 வினாடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

ரௌத்திரி ஆண்டுக்கு இராசி ஆதாயம் 14, விரயம் 2, ஆரோக்கியம் 6, அனாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 6, துக்கம் 1.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$**

**( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )**

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவருமானம் இராஜகண்யமாக வந்துகொண்டிருக்கும். சகோதரி அல்லது புத்திரிக்குச் சுப விசேஷம் நடக்கும். திட்டமிட்ட காரியங்கள் நல்ல விதமாக நடக்கும். அரசாங்கத்தில் நன்மதிப்பு தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். சித்திரைமீ 23உ 59 நாழிகை 11 வினாடிமுதல் 26உ 9 நாழிகை 6 வினாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

ரௌத்திரி ஆண்டுக்கு இராசி ஆதாயம் 2, விரயம் 2, ஆரோக்கியம் 2, அனாரோக்கியம் 6, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 2, துக்கம் 6.

**4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.**

**( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )**

கடகராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். தனவருமானங்கள் நிறைவுதரும். வீடு வாகனங்களில் அபிவிருத்திபலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். 10உ முதலாக வித்துவத்துவம் கலைத்துறையில் உயர் நிலைமையாகும். அரசாங்கத்தில் செல்வாக்கு மிகும். விகித போக்குவரத்தில் நல்லவை ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். சித்திரைமீ 26உ 9 நாழிகை 6 வினாடிமுதல் 28உ 15 நாழிகை 53 வினாடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

ரௌத்திரி ஆண்டுக்கு இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக்கியம் 3, அனாரோக்கியம் 3, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 3, துக்கம் 3.

**5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நல்ல தனவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்ருக இருந்துவரும். வீடு வாகனங்களின் பிராப்தியில் நல்ல சௌகரியம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஜீவனோ பாயத்தொழில்களில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். தாரபுத் திரர்களின் சௌக்கியம் சாதாரணமாக இருந்துவரும். சித்திரைமீ 28உ 15 நாழிகை 58 விடிை முதல் 30உ 21 நாழிகை 51 விடிை வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

ரௌத்திரி ஞூத்துக்கு இராசி ஆதாயம் 14, விரயம் 8, ஆரோக் கியம் 6, அனுரோக்கியம் 3, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 6, துக்கம் 3.

**6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$**

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும் பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் பந்துமித்திரர்களின் நலனில் சுப விசேஷங்களில் செலவும் ஆகும். வித்வத்துவம் கலைத்துறையில் செய்தொழில்களில் மேலிடத் தில் ஸ்லாகித்தலும் சந்துஷ்டியடைதலும் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். சித்திரைமீ 3, 4, 31 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

ரௌத்திரி ஞூத்துக்கு இராசி ஆதாயம் 2, விரயம் 2, ஆரோக் கியம் 2, அனுரோக்கியம் 6, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 2, துக்கம் 6.

**7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$**

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தி யில் பண வருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத்தும். இயந்திர சாதனங்களில் விருத்திபலன் ஏற்படும். வாகன சுகம் திருப்தி யளிக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் ஸ்லாக்கிய பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். மனைவிக்குச் சிரோபாதை நலிவு வந்து உடன் குணமாகும். சித்திரைமீ 5உ 8 நாழிகை 40 விடிைமுதல் 7உ 20 நாழிகை 2 விடிைவரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

ரௌத்திரி ஞூத்துக்கு இராசி ஆதாயம் 14, விரயம் 2, ஆரோக்கியம் 6, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 3, இராஜகோபம் 3, சுகம் 6, துக்கம் 3.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் கெடியான தோரணைக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரர் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். 17உ முதல் கால்நடைபிராப்தி கட்டடபிராப்திகளில் அனுபோக சௌகரியங்கள் மிகும். வித்தியாவியாபாராதிகலைத்துறைகளில் ஓர் உயர்வுதரும். அரசாங்க நன்மைஏற்படும். தாம்பத்தியவாழ்வில், சுமுகம் நிலவும். சித்திரைமீ 7உ 20 நாழிகை 2 விஞடி முதல் 9உ 37 நாழிகை 4 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

ரௌத்திரி ஞூத்துக்கு இராசி ஆதாயம் 5, விரயம் 11, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 2, இராஜகோபம் 6, சுகம் 5, துக்கம் 1.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலஞக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல விதத்தில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் சகோதரிகளின் நலம்நன்ருக இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூல காரியங்களில் 2வே க்கு நல்லன ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய வயிற்றுப் போக்கு போன்ற உஷ்ண நலிவுகள் நீங்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும் சித்திரைமீ 9உ 37 நாழிகை 4 விஞடிமுதல் 11உ 59 நாழிகை 40 விஞடிவரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

ரௌத்திரி ஞூத்துக்கு இராசிஆதாயம் 8 விரயம் 2 ஆரோகியம் 6 அனுரோக்கியம்1 இராஜபூஜிதம் 3 இராஜகோபம் 3 சுகம் 6 துக்கம் 1.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகராசி 9 பாதங்களும் மிச்சிர பலஞகநடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் சீராக இருப்பினும் எல்லாகுடும்ப சம்பிர

தாய விசேஷங்களும் நடந்து கொண்டிருக்கும். சகோதரர்கள் வாஞ்சையுடன் இருப்பர். வித்தியா வியாபாராதி கலை துறைகளில் ஒப்பந்த பத்திரங்களில் ஓர் பெருந்தொகை கைக்கு வரும். புத்திரர் சௌக்கியம் தார சௌக்கியம் நன்ருக இருந்துவரும். சித்திரை மீ 11உ 59 நாழிகை 40 விஞடிமுதல் 14 உ 34 நாழிகை 2 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

ரௌத்திரி ஞலத்துக்கு இராசி ஆதாயம் 11 விரயம் 11 ஆரோக்கியம் 3 அனுரோக்கியம் 3 இராஜபூஜிதம் 3 இராஜகோபம் 3 சுகம் 3 துக்கம் 3

**11. கும்பம் :— அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$**

**( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )**

கும்பராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரருக்கு அரசாங்க நன்மை ஏற்படும். வீடு வாகனுதிகளில் நல்ல சௌகரியம் தரும். செய்தொழில் களில் மேலிடத்திய நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரனுக்கு 26உ ஓர் உயர்வு தரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். சித்திரை மீ 14உ 59 நமழிகை 40 விஞடிமுதல் 16உ 56 நாழிகை 49 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

ரௌத்திரி ஞலத்துக்கு இராசி ஆதாயம் 11 விரயம் 11 ஆரோக்கியம் 3 அனுரோக்கியம் 3 இராஜபூஜிதம் 3 இராஜகோபம் 3 சுகம் 3 துக்கம் 3.

**12. மீனம் :— பூரட்டாதி $\frac{1}{4}$– உத்திரட்டாதி – ரேவதி.**

**( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரி சமனுக இருந்து வரும். 10உ ஆனல் வீடு வாகனங்களில் நவீனம் ஏற்படுதல் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நற்பலன் வந்துசேரும். அரசாங்க நன்மதிப்பு தரும். தார சௌக்கியம் நன்ருக இருந்து வரும். சித்திரைமீ 16உ 56 நாழிகை 49 விஞடிமுதல் 19உ 23 நாழிகை 20 விஞடிவரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

ரௌத்திரி ஞலத்துக்கு இராசி ஆதாயம் 8 விரயம் 2 ஆரோக்கியம் 6 அனுரோக்கியம் 1 இராஜபூஜிதம் 3 இராஜகோபம் 3 சுகம் 6 துக்கம் 1.

# திருவாமூரில்

# அருள்மிகு திருநாவுக்கரசு நாயனர்

# குருபூஜை விழா

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் சித்திரைச் சதயத்திருநாளை ஒட்டி மே மாதம் 7, 8, 9 புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனரின் குருபூஜை விழா அவர்கள் திருவவதாரத்தலமாகிய திருவாமூரில் சிறப்புற நடைபெற விழாக்குழுவினர் உரிய ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

9—5—80 வெள்ளிக்கிழமை குருபூஜைவிழா. அன்று மாலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, திருவெண்ணெய்நல்லூர் திரு. ஆ. இராசு ஓதுவார் அவர்களுக்குத் ‘திருமுறைக்கலாநிதி’ என்ற பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி, பொற்கிழிநல்கி, அன்பர்களிடையே ஆசியுரை வழங்கியருளுவார்கள்.

மூன்று நாட்களிலும் அப்பர் தேவார அருந்தமிழ் மாநாடு கருத்தரங்கம், வழக்காடுமன்றம், பண்ணுராய்ச்சி, இன்னிசை விரிவுரை முதலிய அங்கங்களோடு சிறப்புற நடைபெறும். கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன், திரு. வெங்கடசுப்பா ரெட்டியார், திருக்குறள் திரு. வீ. முனுசாமி, நெய்வேலி தலைமைப்பொறியாளர் திரு. வி. இராமலிங்கம், திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை மற்றும் தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் பங்கேற்கின்றனர்.

குருபூஜை விழாவிற்கு நன்கொடை வழங்க விரும்புவோர் திரு. ஜி. வாகீசம் பிள்ளை, செயலாளர், ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக் குழு. கனகசபைநகர், சிதம்பரம் அஞ்சல் என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

சைவப் பேரன்பர்கள் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாவில் பங்கேற்று இம்மை மறுமைப் பயன் எய்தி உய்வார்களாக.

# சித்திரைமாதச் சிறப்பு நாட்கள்

1 (13—4—80) ஞாயிறு தமிழ் வருடப்பிறப்பு. வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமிக்குச் சீதளகும்பம் ஆரம்பம். சீகாழியில் உச்சிக்காலத்தில் ஸ்ரீ உமாமகேசுவரருக்குப் புழுகாப்பு. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்கார மூர்த்திக்கு அபிஷேகம். விஷு புண்ணியகாலம். திருவையாற்றில் விஷுபுண்ணியகாலதீர்த்தம். புதுப்பஞ்சாங்கம்படித்தல். வசந்தருது.

2 (14—4—80) திங்கள் அமாவாசை. [ மாத சிவராத்திரி.

5 (17—4—80) வியாழன் வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முக ருக்குக் கிருத்திகை அபிஷேகம். அக்ஷயதிருதியை.

6 (18—4—80) வெள்ளி காரைக்கால் தருமபுரம் ஸ்ரீயாழ்மூரிநாதசுவாமி சம்வத்சராபிஷேகம்.

8 (20—4—80) ஞாயிறு திருக்கடவூர், சீகாழி, திருப்பனந்தாள் திருவை யாறு முதலிய திருத்தலங்களில் சைத்ரோத்ஸவ துவஜாரோகணம்.

9 (21—4—80) திங்கள் சீகாழியில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம். திருமுலைப்பால் உற்சவம். காலையில் ஸ்ரீ உமாமகேசுவரர் புழுகாப்பு.

11 (23—4—80) புதன் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஜன்ம நக்ஷத்திரவிழா(ஆயில்யம்). ஒவ்வொருமாதமும் ஆயில்ய நக்ஷத்திரத் தன்று பாடல்பெற்ற தலங்களில் முறையே அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

12 (24—4—80) வியாழன் சைத்ரோத்சவ ரிஷபவாகனக்காட்சி. கடவூர் ஸ்ரீகாலசம்காரமூர்த்தி அபிஷேகம். திருவையாற்றில் ஆத்மபூஜை. திருச்சியில் ஸ்ரீ மாத்ருபூதேசுவரர் ரத்னாவதிக்குத் தாயாகவருதல்.

13 (25—4—80) வெள்ளி திருக்கடவூர்ஸ்ரீகாலசம்காரமூர்த்திஅபிஷேகம். இரவு காலசம்காரக்காட்சி.

14 (26—4—80) சனி சித்திரைத் திருவிழாவில் திருக்கல்யாணவிழா.

15 (27—4—80) ஞாயிறுபிரதோஷம்.ஸ்ரீஉமாபதிசிவாசாரியார்குருபூஜை

16 (28—4—80) திங்கள் வேளூரில் மஹாந்நியாஸபூர்வக மண்டலாபி ஷேக ஆரம்பம். சைத்ரோற்சவ திருத்தேர்.

17 (29—4—80) செவ்வாய் திருக்கடவூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறுமுதலியதலங்களில் சைத்ரோற்சவதீர்த்தம்.குத்தாலத்தில் பஞ்சமூர்த்திகள் காவிரியில் தீர்த்தம் கொடுத்தல். பௌர்ணமிவிரத பூஜை. மாதபூஜையில் மருக்கொழுந்து சாத்துதல்.

19 (1—5—80) வியாழன் திருவையாறு கும்பகோணம் சப்தஸ்தானம்.

20 (2—5—80) வெள்ளி ஆச்சாள்புரம் ஸ்ரீசிவலோகத்தியாகராஜசுவாமிக் கும், மணக்குடிஸ்ரீ சுந்தரேசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம்.

21 (3—5—80) சனி சங்கடஹரசதுர்த்தி, அக்னிநக்ஷத்திர ஆரம்பம்.

24 (6—5—80) செவ்வாய் திருக்கடவூர்ஸ்ரீஅமிர்தகடேசுவர சுவாமிக்கும், திருக்குறுக்கை ஸ்ரீ யோகீசுவர சுவாமிக்கும் சம்வத்சராபிஷேகம்.

25 (7—5—80) புதன் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். காலாஷ்டமி.

27 (9—5—80) வெள்ளி ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிக்கு விசேஷ வழிபாடு. திருப்புகலூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் மோக்ஷம்.

29 (11—5—80) ஞாயிறு கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவர சுவாமி சம்வத்சராபிஷேகம்.

30 (12—5—80) திங்கள். பிரதோஷம். மாதசிவராத்திரி.

31 (13—5—80) செவ்வாய் திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.

# இவர்களின் வருங்காலம் வளமாக அமையவே பாங்க் ஆஃப் பரோடாவின் ரெகுலர் இன்கம்–கம்-ரேக்கரிங் டேபாஸிட் திட்டம்

மோகனுக்கு மணியான இரு செல்வங்கள். கண்ணன் மற்றும் பாப்பா. இவர்களது வருங்காலத்தைப் பற்றிய கவலை மோக-னுக்குச் சிறிதும் இல்லை. ஏனெனில் இவர் குழந்தைகள் இருவர் பெயரிலும் பாங்க் ஆஃப்பரோடாவின் ஆர்.ஐ.ஆர்.டி. திட்டத்-தில் கணக்குகள் தொடங்கி உள்ளார்.

பிள்ளைகள் பெரியவர்கள் ஆகும் காலத்தில், தொகையும் பெருகிவிடும். இந்தப் பணத்தைக் கொண்டு, அவர்களின் கல்வி, திருமணம் மற்றும் கண்ணனின் தொழில் ஏற்பாடு...எளிதாக அமையுமே.

மோகன் தன் பிள்ளைகளின் வருங்காலம் வளமாக அமைய பாங்க் ஆஃப் பரோடாவின் ஆர்.ஐ.ஆர்.டி. திட்டத்தின் உதவியை நாடினர்.

**நீங்களும் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடையலாமே.**


ரூ. 500 அல்லது அதற்கு மேலும் (ரூ. 100ன் மடங்குகளில்) 12 மாதங்கள் முதல் 120 மாதங்களுக்கான திட்டத்தில் கணக்கினைத் தொடங்குங்கள்.

வட்டியுடன் சேர்ந்து வருவதால் பெருகிக் கொண்டே வரும்.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகமைந்த பாங்க் ஆஃப் பரோடா கிளை ஒன்றுக்கு வருகை தருக.

## பாங்க் ஆஃப் பரோடா

(இந்திய அரசுக்குச் சொந்தமானது)
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 1300க்கு மேற்பட்ட கிளை அமைப்புகள் கொண்டது.
70 ஆண்டுகள் பாங்க் சேவை
25 ஆண்டுகள் வெளிநாட்டுப் பாங்க் பணிகள்




Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram
at the Gnanasambandam Press, Dharmapuram